

₹100/-

ஞானகுரு

# மகிழ்ச்சி

ஏப்ரல் 2022

எஸ்.கே.முருகன்

## பெண் ரகசியம்








# யார் உண்மையான கடவுள்..?

யாருடைய கடவுள் உண்மையானவர் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகத்தான், இந்த உலகில் பெரும்பாலான போர்கள் நடத்தப்பட்டுள்ளன. மதத்தின் பேரில்தான் எக்கச்சக்க உயிர்கள் பறிபோயிருக்கின்றன. அமைதிப் பூங்கா என்று கருதப்படும் நம் தமிழகத்தில்கூட, சமணர்கள் கழுவேற்றம் நடப்பதற்குக் காரணம், கடவுள் சண்டைதான்.

கடவுள் அன்பே உருவானவர் என்றால், அவரை பின்பற்றுபவர்கள் மட்டும் ஏன் இத்தனை மூர்க்கமாகவும், ரத்தம் ருசிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்..?

ஏனென்றால், இவர்களிடம் இருப்பது போலியான கடவுள். அதாவது மனிதர்கள் உருவாக்கிய கடவுள். இந்த கடவுளுக்காகத்தான் மிகப்பெரிய கோயில், மிகப்பெரிய சிலை, மிகப்பெரிய விழாக்கள் ஏற்படுத்துகிறார்கள். தங்கள் கடவுள் மட்டுமே இந்த உலகில் நிலைத்திருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தன்னுடைய கடவுளை ஜெயிக்க வைப்பதற்காக, மற்ற கடவுளின் ஆதரவாளர்களை தீர்த்துக்கட்டுவதும் நியாயம் என்பதுதான் இவர்களுடைய வழிபாடு.

இந்த கடவுள் போலி என்றால் உண்மையான கடவுளும் இருக்கிறாரா..?

ஆம், இருக்கிறார். இந்த பிரபஞ்சத்தை படைத்ததாக நம்பப்படுபவர் உண்மையான கடவுள். அவர் ஒவ்வொரு உயிரிலும் உயிராக இருக்கிறார். இந்த உலகில் புல், பூண்டு தொடங்கி மனிதன் வரையிலும் உண்மையான கடவுளின் அவதாரம்தான். இன்னொரு வகையில் சொல்லப்போனால், ஒவ்வொரு உயிரும் கடவுள்தான். அதனால், இந்த கடவுளிடம் அன்பு மட்டும்தான் இருக்கும். வெறுப்பு இருக்காது.

இந்த கடவுள் அனைத்து உயிரையும் சமமாக பார்க்கக்கூடியவர். இவரிடம் ஏற்ற தாழ்வுகள் கிடையாது. இவரிடம் பொய்யான நம்பிக்கை கிடையாது. சொர்க்கம், நரகம் போன்ற வாக்குறுதிகள் கிடையாது. சுருக்கமாக சொல்வது என்றால், உன் வாழ்க்கையை நீ மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பது மட்டும்தான் உண்மையான கடவுளின் விருப்பம். அதை நீ சிக்கலாக்கிக் கொண்டால், காப்பாற்றுவதற்கு உண்மையான கடவுள் ஓடோடி வரமாட்டார். சிக்கல் ஏற்படுத்திய நீயே தீர்வையும் காண வேண்டும். ஏனென்றால்,

அதனால்தான், இந்த கடவுளை யாரும் விரும்புவது இல்லை, பின்பற்றுவதும் இல்லை. அதனால், மனிதர்களின் ஆசைகளை நிறைவேற்றும் போலி கடவுளை வழிபடவே ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்தான், காணிக்கை கொடுத்தால் மனிதர்களின் ஆசைகளை நிறைவேற்றுவார், எதிரிகளை அழிப்பார். இந்த கடவுள் நீடுழி வாழ வேண்டும் என்பதற்காகத்தான் மனிதர்கள் போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படியென்றால், நிஜமான கடவுள் எதற்காக..? அவர் மனிதனுக்கு என்னதான் செய்வார்..? உண்மையிலே நிஜமான கடவுள் இருக்கிறாரா..?

இதற்கு பதில் உன்னிடம்தான் இருக்கிறது. ஏனென்றால், நீயும் ஒரு கடவுள்.

**ஆசிரியர்**

# பெண் மனதில் ரகசியம்

சூரிய ஒளியில் குளித்துக்கொண்டிருந்த ஞானகுருவின் அருகே வந்தான் மகேந்திரன். அவர் மனதில் ஏதோ ஒரு கேள்வி நிற்பது தெரியவே, 'நீ கேட்க வந்ததை கேள்' என்றார் ஞானகுரு.

''பெண்ணின் மனதை அறியவே முடியாது, அது ஆழ்கடல் போன்றது. பெண்ணின் மனதை கடவுளாலும் தெரிந்துகொள்ள முடியாது என்றெல்லாம் காலம் காலமாக சொல்லிக்கொண்டே இருக்கிறார்களே, உண்மையில் பெண் அத்தனை தூரம் ரகசியமானவளா.. அப்படி அவள் மனதில் என்னதான் இருக்கிறது?" என்று கேட்டார்.

''பெண்ணின் மனதை ஆண்கள் அறிந்துகொள்ள முயற்சி செய்வதே இல்லை. அதனால் இப்படி சொல்லி தப்பித்துக்கொள்கிறார்கள்...""

"உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்களேன்..."

"ஒரு நகர்ப்புற கதையைக் கேள்" என்றபடி கதை சொல்லத் தொடங்கினார் ஞானகுரு.

நகர்வலம் வரும்போது அழகான ஒரு பெண்ணை கண்டதும், அந்த நாட்டு அரசன் காதலில் விழுந்தான். அவளை திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டான். அரசனை திருமணம் முடிப்பதற்கு அந்த பெண் ஒரே ஒரு நிபந்தனை விதித்தாள்.

ஒரு பெண் ஆழ் மனதில் என்ன நினைக்கிறாள் என்ற கேள்விக்கு பதில் சொல்லிவிட்டால் திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொல்லிவிட்டாள். உடனே அரசவையைக் கூட்டி மந்திரிமார்கள், புலவர்கள், அறிஞர்களிடம் அந்த கேள்விக்கான பதிலைக் கேட்டான்.





www.gyanaguru.com

அத்தனை பேரும் சொல்லிவைத்தது போலவே, 'இதற்கு அந்த கடவுளாலும் பதில் சொல்ல முடியாது' என்று கை விரித்தார்கள்.

அரசன் சோகத்தில் ஆழ்ந்துவிட்டான். சோகத்தை மறப்பதற்காக காட்டுக்குள் வேட்டைக்குச் சென்றான். அரசனின் மனதில் குழப்பத்தில் இருந்த காரணத்தால், எதிரே வந்த புலியை கவனிக்கத் தவறிவிட்டான். அரசனை புலி தாக்குவதற்குள், ஒரு வேடன் பாய்ந்துவந்து புலியைக் கொன்று அரசனைக் காப்பாற்றினான்.

வேடனின் வீரத்தை அரசன் பாராட்டினான். எதிரே வந்த புலியை கவனிக்காத அளவுக்கு ஏதோ கவலையில் இருப்பது போல் தெரிகிறதே என்று வேடன் கேட்டதும், தான் விரும்பிய பெண் கேட்ட கேள்வியைச் சொன்னான். இதற்கு பதில் தெரியாமல் தவிக்கிறேன் என்று சொன்னான்.

"நீங்கள் தைரியமாக நாட்டுக்குச் செல்லுங்கள்... நான் எப்படியாவது இந்த கேள்விக்கு விடை அறிந்து வருகிறேன்" என்று வேடன் சொன்னான். உடனே சந்தோஷமான அரசன், 'அப்படி நீ விடை கொண்டுவந்தால், என் நாட்டின் ஒரு பகுதிக்கு உன்னை அரசனாக்குகிறேன்" என்று சொல்லிவிட்டு நாடு திரும்பினான்.



இந்த கேள்விக்கு விடை கண்டுபிடிப்பது எளிது என்று நினைத்த வேடன், காட்டுக்குள் இருந்த ரிஷி முனிவர்கள் சிலரை சந்தித்து கேட்டான். அவர்கள் எல்லோரும் தெரியாது என்றே சொல்லி திருப்பியனுப்பினார்கள். அந்த காட்டுக்குள் ஒரு சூனியக்கார கிழவி இருப்பதாக கேள்விப்பட்டிருக் கிறான். எனவே, அவளை தேடிச் சென்றான்.

"இந்த கேள்விக்கு விடை கண்டுபிடிப்பது எளிது என்று நினைத்த வேடன், காட்டுக்குள் இருந்த ரிஷி முனிவர்கள் சிலரை சந்தித்து கேட்டான். அவர்கள் எல்லோரும் தெரியாது என்றே சொல்லி திருப்பியனுப்பினார்கள்."

மிகுந்த சிரமத்திற்குப் பிறகு அந்த சூனியக்காரக் கிழவியை கண்டுபிடித்து, அந்த கேள்வியைக் கேட்டான்.

அதற்கு அந்த கிழவி, 'இந்த கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். இந்த பதிலால், உன் அரசனுக்கு திருமணம் நடக்கும். உனக்கு நாடு கிடைக்கும். எனக்கு என்ன கிடைக்கும்' என்று கேட்டாள்.

உடனே வேடன், 'நீ கேட்பதும் நியாயமான கேள்விதான். எனக்கு நாடு கிடைத்துவிட்டால், நீ என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன்" என்றான்.

உடனே வேடனுக்கு பதில் சொன்னாள் கிழவி. 'தன் சம்பந்தப்பட்ட எந்த ஒரு முடிவு என்றாலும், அதை தானே எடுக்க வேண்டும் என்பதுதான் பெண்ணின் ஆழ்மனது எண்ணம்" என்று சொன்னாள்.

உடனே இந்த பதிலை வேடன் அரசனிடம் சொல்ல, அவன் மனம் விரும்பிய பெண்ணிடம் சொல்ல, அவர்களுடைய கல்யாணம் இனிதே நடந்து முடிந்தது. உடனே வாக்கு கொடுத்தது போலவே, தன் நாட்டின் ஒரு பகுதியை வேடனுக்குக் கொடுத்தான்.

நாட்டுக்கு அரசனாக மாறிய வேடன், வாக்கு கொடுத்தது போலவே சூனியக்காரக் கிழவியிடம் சென்றான். 'நான் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டான்.

"நீ என்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்' என்றாள் சூனியக்கார கிழவி. வேடன் வாக்கைக் காப்பாற்றுவதற்காக அதனை மனமார ஒப்புக்கொண்டான்.

வேடன் மனப்பூர்வமாகப் பதில் சொன்னதைக் கேட்டதும், அந்த சூனியக்காரக் கிழவி, அழகான தேவதை போன்ற உருவத்துக்கு மாறினாள்.

அவள் வேடனிடம், 'உனக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன். அதாவது உன்னுடன் மற்றவர்கள் இருக்கும்போது நான் இப்படி அழகியாக இருந்தால், தனியே இருக்கும்போது கிழவியாக இருப்பேன். அப்படி இல்லை என்றால் தனியே உன்னுடன் இருக்கும்போது அழகியாக இருக்க வேண்டும் என்றால், வெளியே வரும்போது கிழவியாக இருப்பேன். உன்னுடைய விருப்பம் எது?' என்று கேட்டாள்.

அவன் சற்றும் யோசிக்காமல் சொன்னான், "இது உன் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், முடிவை நீ தான் எடுக்க வேண்டும்" என்று, சொன்னான்.

உடனே அந்த கிழவி, "முடிவை என்னிடம் விட்டுவிட்டதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதனால், இனி எப்போதும் அழகிய தேவதையாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்." என்றாள்.

இந்த கதை என்ன சொல்லவருகிறது என்பது புரிகிறதா மகேந்திரா... பெண் அவள் சம்பந்தப்பட்ட முடிவுகளை அவளே எடுக்கும்போது, தேவதையாக இருக்கிறாள். முடிவுகள் அவள் மீது திணிக்கப்படும் போது சூனியக்காரக் கிழவியாகி விடுகிறாள். இதுதான் அந்த ரகசியம்" என்று முடித்தார்.

ஆச்சர்யத்தில் நின்றார் மகேந்திரன்.







# கோபம்
## எனும் மாயப்பிசாசு..!

"சின்னச்சின்ன விஷயங்களுக்கு எல்லாம் கோபப்படுகிறார். டீ சூடாக இருந்தாலும் கோபம், ஆறிவிட்டாலும் கோபம். இவரை சமாளிக்கவே முடியவில்லை. நான் என்னதான் செய்வது?" காயத்ரி ஞானகுருவிடம் சரண் அடைந்தாள்.

"நான் சரியாகவே இருக்கிறேன். சின்னச்சின்ன தவறுகள் என்றாலும் கோபம் வருகிறது, அவர்களை திருத்துவதற்காகவே கோப்பப்படுகிறேன். இதில் என்ன தவறு?" பிரசன்னாவும் நியாயம் கேட்டான்.

"உனக்கு யாரெல்லாம் கோபம் உண்டாக்குகிறார்கள்..?"

"என் மனைவி மட்டுமல்ல, குடும்பத்தில் மற்றவர்களும் அலுவலகத்தில் அனைவரும்தான். நான் கோபப்படுவேன் என்று தெரிந்தாலும் யாரும் மாறுவதே இல்லை. இவர்கள்தான் என்னை கோபப்படுத்துகிறார்கள்" என்றான் பிரசன்னா.

சிரித்தபடி தொடர்ந்தார் ஞானகுரு. "நன்றாக யோசித்துப் பார். நீ எதிர்பார்க்கும் ஒன்று கிடைக்காதபோது அல்லது நடக்காதபோதுதான் உனக்கு கோபம் வருகிறது. அதாவது, இந்த உலகத்தில் எல்லோருமே, எல்லாமுமே உன் விருப்பப்படி மட்டுமே நடக்கவேண்டும் என்று நினைக்கிறாய். உன்னுடைய கோபம் எதிரே இருப்பவர்களுக்கு எப்பேர்ப்பட்ட காயத்தை உண்டாக்கும் என்பதைப்பற்றி நீ கவலைப்படுவதே இல்லை.

ஆட்களே இல்லாத இடத்தில் நீ கோபமின்றி இருப்பாய் என்று நினைக்கிறாயா..? நிச்சயம் இருக்க மாட்டாய். ஏதேனும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து மனிதர்கள் இல்லையென்றாலும் எதன் மீதேனும் உன் கோபத்தைக் காட்டுவாய். இதெல்லாம் ஏன் தெரியுமா?

உனக்கு கோபத்தை வேறு யாரும் தூண்டுவது இல்லை. உன்னிடம்தான் கோபம் இருக்கிறது. அதைத்தான் நாள்தோறும் எல்லோரிடமும் விதைத்துக்கொண்டே இருக்கிறாய். கோபம் என்பது ஒரு மாயப்பிசாசு. நீ ஒவ்வொரு முறை கோபப்படும் நேரத்திலும் உன்னுடன் மேலும் மேலும் ஒட்டிக்கொள்ளும். பொறுமையும் புன்னகையும் மாயப்பிசாசின் எதிரிகள். நீ பிறரிடம் பொறுமையைக் கடைப்பிடிக்கும் நேரத்திலும், புன்னகைக்கும் நேரத்திலும் அந்த மாயப் பிசாசு உன்னிடம் இருந்து விலகிவிலகி செல்லும்.

இன்னொரு உண்மை தெரியுமா? அந்த மாயப்பிசாசு உன்னை நெருங்கும் ஒவ்வொரு கணமும் உன் ஆயுளில் ஒரு நாள் குறைந்துகொண்டே இருக்கும். அதாவது உன் ஒவ்வொரு கோபமும் உன் ஆயுளில் ஒரு நாளைக் குறைக்கும். இது மருத்துவ ரீதியிலும் உண்மை என்பதை உன் மருத்துவரிடம் கேட்டு தெரிந்துகொள்.

நீ கோபப்படாமல் பேசுவதால் எதையும் இழந்துவிட மாட்டாய். 'அடேங்கப்பா... சூரியனையே ஒரு டம்ளரில் கொண்டுவந்துவிட்டாயே?' என்று மிகச்சூடாக உன் மனைவி காபி கொண்டுவரும் போது புன்னகைத்துப் பழகு. அவளுக்கும் வெட்கம் வரும். சந்தோஷம் வரும். நீ நினைத்த மாதிரி காபியும் வரும்.

சிறையில் இருக்கும் மனிதர்களில் பெரும்பாலோர் கோபத்தில் தவறு செய்தவர்கள்தான். தோல்வி அடைந்தவர்களில் பெரும்பாலோர் கோபத்தில் முடிவு எடுத்தவர்கள். விவாகரத்து வாங்கியவர்களில் பெரும்பாலோர் கோபத்திற்கு அடிமையாக இருந்தவர்கள்தான். கோபத்தினால் ஒரே ஒரு நன்மைகூட யாருக்கும் இல்லை எனும்போது எதற்காக கோபப்படுவதற்கு ஆசைப்படுகிறாய்..?

இனியும் நீ மாயப்பிசாசுடன் வாழத்தான் போகிறாயா?"" என்று கேட்டார் ஞானகுரு.

மிரட்சியுடன் புன்னகைத்தான் பிரசன்னா.

# கணவரிடம் பொய் சொல்லாமா?

ஞானகுருவுக்கு ஒரு பை நிறைய பழங்களை அள்ளிக் கொடுத்தாள் இளம் பெண் ஒருத்தி. ஏதேனும் விஷேசமாக இருக்குமோ என்ற எண்ணத்தில் அவள் முகத்தைப் பார்த்தார். அதற்கான வாய்ப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. முகத்தில் சோகம் அப்பியிருந்தது.

‘‘என்ன தவறு செய்திருக்கிறாய் பெண்ணே..?” தூண்டில் போட்டார் ஞானகுரு.


மளுக்கென கண்ணீர் சிந்த, ‘‘என் கணவரிடம் ஒரு பொய் சொல்லிவிட்டேன்... அது அவருக்குத் தெரிந்துவிடுமோ என்ற பயம் இப்போது வந்துவிட்டது” என்றாள். மேலும் பேசும்படி ஞானகுரு கண் ஜாடை காட்டியதும் பேசத் தொடங்கினாள்

‘‘நான் ஒருவரை கல்லூரி காலத்தில் உயிருக்கு உயிராக காதலித்தேன். ஆனால், கல்லூரி முடிந்ததும், அந்த காதல் முடிந்து போய்விட்டது. அதன்பிறகு அவர் வேறு ஊருக்கு போய்விட்டதால், அந்த காதலால் எந்த பிரச்னையும் இல்லை. வீட்டில் கல்யாணம் குறித்து பேசியதும், ஒப்புக்கொண்டேன். என் கணவர் நல்லவராகத்தான் இருக்கிறார். அவர் முதல் இரவிலேயே, ‘உனக்கு ஏதேனும் பழைய காதல் இருக்கிறது என்றால், இருந்தது என்றால் சொல்லிவிடு...’ என்று கேட்டார். அப்போது, அப்படி எதுவும் இல்லை என்று தைரியமாகச் சொல்லிவிட்டேன்.

எங்களுடைய திருமண வாழ்வு நன்றாகத்தான் போய்க்கொண்டு இருக்கிறது. ஒரு குழந்தையும் பிறந்துவிட்டது. சமீபத்தில்தான், என்னுடன் கல்லூரியில் படித்த ஒருவர், என் கணவருடைய அலுவலகத்தில் வேலை செய்கிறார் என்பது தெரியவந்தது. அவருக்கு நான் கல்லூரி காலத்தில் செய்த காதல் நன்றாகவே தெரியும். என் கணவரிடம் அதை சொல்லிவிடுவாரோ..



# கணவரிடம் பொய் சொல்லாமா?



எங்கள் உறவு பிரிந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது" என்று சொல்லி முடித்தாள்.

**"இப்போதும் உனக்கு பழைய காதல் மிச்சம் இருக்கிறதா.?"**

"உண்மையாகவே இல்லை..."

"கணவன் மனைவி உறவு என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டிய ஒன்று. பழைய காதல் என்பது குற்றம் அல்ல. ஆனால், திருமணத்திற்கு முன்பு யார் காதல் செய்திருந்தாலும், யார் தப்பு செய்திருந்தாலும் அதனை சொல்லியிருக்க வேண்டும். நீ செய்த காதல் உன் கணவனுக்குத் தெரிய வேண்டியது அவசியம். திருமணத்திற்கு முன்னரே சொல்லி இருக்கலாம். திருமணம் முடித்த தினத்திலாவது, ஒரு பப்பி லவ் இருந்தது என்று சொல்லி, முடித்திருக்கலாம். இப்போது தானாக அது வெளிவந்துவிடுமோ என்று அச்சப்படுகிறாய்..."

**"கல்லூரி தோழரை சந்தித்து, என் காதலை சொல்லிவிட வேண்டாம் என்று கோரிக்கை வைக்கலாமா.?"**

"அது, இன்னமும் மோசமான சிக்கலை உருவாக்கிவிடும் பெண்ணே. இப்போது உன் மனதில் காதல் இல்லை என்றால், எத்தனை விரைவில் உன் கணவனிடம் உண்மையை சொல்ல முடியுமோ, அத்தனை சீக்கிரம் சொல்லிவிடு..."

**"அவர் கோபப்படுவாரே, என்னைவிட்டு பிரிந்துபோனால்..?"**

"அப்படி நடக்காது என்ற நம்பிக்கையுடன் இரு. ஆனால், உண்மையை மறைக்க முடியாது பெண்ணே. உன் கல்லூரி நண்பர் இல்லாவிட்டாலும், வேறு யாராவது ஒருவர் சொல்லிவிடலாம். நீ சொல்லாமல், வேறு யார் மூலமாவது உன் காதலை கேட்க நேர்ந்தால், அது உன் கணவருக்கு பெருத்த வருத்தத்தையும் கோபத்தையும் தரும்..."

**"இப்போது நான் என் கணவருக்கு உண்மையாகத்தான் இருக்கிறேன். ஆகவே, என் பழைய காதல் என்பது அத்தனை பெரிய தப்பு இல்லைதானே..?"**

"இது எத்தனை பெரிய தப்பா அல்லது தப்பு இல்லையா என்பதை உன் கணவன் முடிவு செய்யட்டும். இத்தனை நாட்கள் மறைத்ததற்கான காரணத்தையும் சொல்லிவிடு. ஆனாலும், உண்மையை மனதிற்குள் பூட்டி வாழ முடியவில்லை என்பதையும் சொல்.

பொதுவாக ஆண்கள் பழைய குப்பைகளைக் கிளறுவதில்லை. திருமணத்திற்குப் பிறகு நீ நல்ல மனைவியாக இருந்தால், உன்னை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம். ஒருவேளை சண்டை போடலாம். கொஞ்ச நாள் பிரியலாம், தள்ளி வைக்கலாம். எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ளும் முடிவுக்கு வந்துவிடு.. அதுதான் உனக்கு நிம்மதியைக் கொடுக்கும்..."


> **மந்திரச்சொல்**
>
> நம்பிக்கை நிறைந்தவன்
> ஒருபோதும் முதுமை
> அடைவதில்லை.

**"ஒருவேளை அவர் என்னை வீட்டிலிருந்து அனுப்பிவிட்டால் என்ன செய்வது..?"**

"கொஞ்சநாள் உன் பிறந்த வீட்டில் இரு. அவருடைய அழைப்புக்காக காத்திருப்பேன் என்பதை சொல். பிரிவு அவருக்கு சில உண்மைகளை உணர்த்தும். எனவே, நன்மை நடக்கும் என்று நம்பிக்கையுடன் இரு. பொய்யுடன் பயந்துபோய் வாழ்வதைவிட, உண்மையைச் சொல்லி வரும் சிக்கலை சந்திப்பது மேல். சரி, அவருக்கு இப்படி ஒரு காதல் இருந்தது அல்லது இருப்பது தெரியவந்தால் நீ என்ன செய்வாய்..?"

ஒரு கணம் திகைத்து நின்றாள். "நிச்சயம் சண்டை போடுவேன். பழைய காதல் இன்னமும் தொடர்கிறதா என்று பார்ப்பேன். அப்படி இல்லை என்றால் கொஞ்ச நாளில் சமாதானம் ஆகிவிடுவேன்..."

"அப்படியே உனக்கும் நடக்கட்டும் பெண்ணே..."" என்றபடி சாய்ந்து படுத்தார் ஞானகுரு.





www.gyanaguru.com





# முகமூடிகளை கழட்டி வை

பூக்களுடன் பேசிக்கொண்டு இருந்தார் ஞானகுரு. அவரை சந்திக்க ஒரு பழக்கூடையுடன் வந்தார் கல்லூரி பேராசிரியர் ஒருவர். புன்னகையை பரிமாறிய ஞானகுருவிடம், ‘சுவாமி என் மனதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை, தியானம் செய்தாலும் தெளிவு தென்படுவதில்லை’ என்று நேரடியாக கேள்விக்கு வந்தார்.

”குழப்பத்துடன் அமர்ந்தால் குழப்பத்துடன்தான் எழுவாய். உன் மனதை உன்னால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், நீ ஒரே நாளில் பல்வேறு அவதாரங்கள் எடுக்கிறாய். மல்டிபிள் பெர்சனாலிட்டியாக காட்சி தருகிறாய். அதனால், உண்மையைக் கண்டறிவதில் குழப்பம் ஏற்படுகிறது”

## ‘’நான் அப்படி இருப்பதில்லையே..?”

“சிம்பிள், என் முன்னே ஒரு மாணவனாக நிற்கிறாய், உன்னுடைய மாணவர்கள் முன்பு, எல்லாம் தெரிந்த பேராசிரியராக பேசுகிறாய். உன்னுடைய மேல் அதிகாரிகளிடம் அடக்கமானவன் பவ்யமாகிறாய். உன் மனைவியிடம் அன்பு செலுத்துபவனாகவும், உன் குழந்தைகளிடம் பெரும் பாசம் கொண்டவனாகவும் காட்சி தருகிறாய். ஒவ்வொரு நபருக்கு ஏற்ப, நேரத்துக்குத் தகுந்த முடிவுகள் எடுக்கிறாய். இவர்களில் உண்மையான நீ யார்..? யாரிடமெல்லாம் உண்மையாக இருக்கிறாய், யாரிடமெல்லாம் நடிக்கிறாய் அல்லது சமயோசித புத்தியுடன் இருக்கிறாய் என்றெல்லாம் உனக்கே புரிவதில்லை… நீ அணிந்திருப்பது முகமூடியா அல்லது உண்மை முகமா என்பதே புரியாத அளவுக்கு முகமூடியை கவசமாக மாற்றிவிட்டாய்.. ”

## ”ஆனால், இது எல்லாமே நான்தானே…”

“உண்மைதான். உன் மனைவியை பாராட்டும் அதே நேரம் பாராட்டினால்தான் காரியம் சாதிக்க முடிகிறது என்று உன்னை நீயே பாராட்டிக் கொள்கிறாய். அதிகாரிகளுக்கு முன்பு நீ பவ்யமாக இருந்தாலும், உண்மையில் நீ அவர்களை மதிப்பதில்லை. உன்னை நீ நல்லவனாக, வல்லவனாக காட்டிக்கொள்ள எத்தனையோ முயற்சிகள் செய்கிறாய். உள்ளே ஒன்றும் வெளியே ஒன்றுமாகத்தான் நீ மட்டுமல்ல, அத்தனை மனிதர்களும் வாழ்கிறார்கள். அதுதான் மனதை குழப்புகிறது. அதனால் இத்தனை வேடம் அணிந்துகொண்டு மனதை புரிந்துகொள்ள நினைக்காதே. எல்லா பந்தங்களில் இருந்தும் நீ விடுபடும் நேரத்தில், பிறருக்காக நடிக்க விரும்பாத நேரத்தில் உன் மனதை திறந்து பார். உன்னை புரிந்துகொள்வாய்”

பதில் பேச இயலாமல் நின்றார் பேராசிரியர்.



www.gyanaguru.com



# திருநங்கையும் தேவதையே...

ரயில் தடதடத்துக் கொண்டிருந்தது. பெட்டியின் தாலாட்டில் லயத்து புறக்காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்த ஞானகுருவுக்கு புகைக்கும் ஆசை எட்டிப் பார்த்தது. பையில் இருந்த கடைசி சுருட்டை எடுத்துப் பார்த்தார். இனி எப்போது கிடைக்குமோ என்ற எண்ணமே அந்த சுருட்டின் மீது அதீத மோகம் கொடுத்தது. நுரையீரலின் தூர்பாகத்தைத் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு ஆழமாக இழுத்துப் புகை விடும் விருப்பம் ஆட்டுவித்தது. பற்றவைக்க நினைத்த நேரத்தில்... திடுமென அந்த சுருட்டை ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்தார்.

அதீத ஆசையே மனிதனை பழக்கத்தின் பிடியில் சிக்கவைக்கும் பிசாசு. அப்படி தோன்றும் ஆசைகளை அந்தந்தக் கணமே நசுக்கிவிட்டால்... ஆனந்தம் பேரானந்தமே!

”யேய்... இங்க பாரு ஒரு சாமியார்..” குரல் வந்த திசையில் திரும்பினார். திருநங்கை ஒருவர் கூப்பிட, இன்னும் இருவர் வந்து சேர்ந்து... சிரித்தார்கள்.

”சாமி... கஞ்சா வச்சிருக்கியா..?” என்று ஒருத்தி கேட்க, இன்னொருத்தி, “யேய் சாமிகிட்ட அப்படிக் கேட்காத... சாபம் விட்ருவாரு” என்று நாணிக்கோணி சிரித்தாள். புன்னகையுடன் அவர்களை அழைத்து, தன்னருகே உட்காரும்படி சைகை செய்தார்.

”யேய்... வாங்கடி! சாமிக்கு மூணு பேரும் வேணுமாம்...” என்று ஒருத்தி வெடிச்சிரிப்புடன் சொல்ல, மற்றவர்கள் அந்த கம்பார்ட்மென்டே குலுங்கும்படி சிரித்து அருகே உட்கார்ந்தார்கள். அருவருப்பான வாடையை அப்படியே ஏற்றுக்கொண்டு, மீண்டும் மீண்டும் சுவாசித்தார்.

அக்கம்பக்கத்து இருக்கைகளில் இருந்து சிலர் எட்டிப்பார்த்ததும் ஒரு திருநங்கை, “இங்க என்ன அவுத்துப்போட்டா ஆடுறோம்... வேடிக்கை பார்க்க வந்துடுறானுங்க...” என்று ஆக்ரோஷமாக சில கெட்டவார்த்தைகளை அள்ளி வீச, எட்டிப் பார்த்தவர்கள் அதேவேகத்தில் தலையை இழுத்துக் கொண்டார்கள்.

”எல்லோரும் சாப்பிட்டு விட்டீர்களா?” என்று வாஞ்சையுடன் கேட்டார் ஞானகுரு. அவர்கள் உதடுகளில் நெளிந்த கேலிச் சிரிப்பு சட்டென்று உறைந்துபோனது.

”சாமி... எல்லா பயலும், எங்க உடம்புக்குள்ள என்ன இருக்குதுன்னு பார்க்கத்தான் கூப்பிடுறான், நீங்கதான் சாப்பிட்டாச்சான்னு கேட்டிருக்கீங்க... ஒருத்தனும் மதிக்கிறதில்லை... நாங்க கேவலமான ஜென்மம் சாமி...” என்று ஒருத்தி சொல்ல, மற்றவர்களும் மௌனமாக ஏற்றுக் கொண்டார்கள்.



”சாப்பிடவில்லை என்றால் உணவு வாங்கித் தருகிறேன்...”

’’அதெல்லாம் ஆச்சு சாமி, இப்பத்தான் ஒரு நாசமாப்போறவன் பிரியாணி வாங்கிக் கொடுத்தான்...’’ சலிப்புடன் ஒரு திருநங்கை சொன்னாள்.

”சபாஷ்... உணவு கொடுத்தவருக்கு நல்ல பாராட்டு”

”பிரியாணி வாங்கிக் கொடுத்து, ஐம்பது ரூபாய் தர்றேன்னு சொன்னான். சரின்னுதான் அவன்கூட டாய்லெட்டுக்குள்ள போனேன். இதோ தர்றேன்னு வெளியே வந்த நாய், பத்து ரூபாயைக் கொடுத்துட்டு, ‘போதும்... போ’ன்னுட்டான் அந்தத்.....” என்று கெட்ட வார்த்தைகள் வரும் முன்னரே தடுத்து நிறுத்தினார்.

கொஞ்சநேரம் மூவரும் அமைதியாக இருந்தார்கள். ஏதோ ஒன்று கேட்க நினைத்து ஒரு பெண் அமைதியானாள். அவளது தலையைத் தடவியபடி, “கேட்க விரும்பியதைக் கேட்டு விடு...” என்றார்.

”எங்களை மட்டும் எதுக்காக அந்தப் பாழாப்போன ஆண்டவன் இப்படி ரெண்டுங்கெட்டானா படைச்சார்... நாங்க என்ன பாவம் செஞ்சோம்...” என்று கேட்டாள்.

”நீங்கள் எழுத்துப்பிழைகள் அல்ல. நீங்கள் ஒரு தனி வகை எழுத்து. கடவுள் செய்த தவறு என்று வருத்தப்படுவதில் அர்த்தமே இல்லை. கோடி கோடியாக வாழும் ஆண், பெண்ணைப் போன்று நாங்கள் இல்லை, நாங்கள் ஒரு புதிய படைப்பு என்று சந்தோஷப்படுங்கள்...” புன்னகையுடன் பேசினார்.

’’அட போங்க சாமி. எங்க பிழைப்புக்கு கழுதை, பன்னியெல்லாம் எவ்வளவோ தேவலை. எந்த கழுதையும் இன்னொரு கழுதையை கூட்டத்தில இருந்து விலக்கி வைக்காது. ஆனா, தேவைக்கு மட்டும் பயன்படுத்திக்கிற கக்கூஸ் மாதிரி ஆம்பிளைங்க பார்க்குறாங்க. அதுகூட பரவாயில்லை... இந்தப் பொம்பளைங்க, நடுவழியில் நரகலைக் கண்டது மாதிரி எங்களைப் பார்த்ததுமே முகத்தைச் சுளிச்சுக்கிட்டு ஒதுங்கிப் போறாங்க...” என்றாள் ஒருத்தி.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனையும் அறிவுரையும் தருவதை விட இந்த உலகில் எளிதான செயல் வேறு எதுவும் இல்லை. தொண்டையை செருமியபடி பேசத் தொடங்கினார் ஞானகுரு.

”குழந்தைகளைப் பார்த்திருப்பீர்கள். அவற்றுக்கு ஆண், பெண் என்ற பேதம் தெரியாது... புரியாது. பஸ்ஸில் ஆண்கள் பக்கமும் உட்காரும், பெண்கள் மடியிலும் தாவிச் செல்லும். குழந்தைகளால் யாருக்கும் எவ்விதமான பாதிப்பும் நேராது...”

பேச்சை இடைமறித்த ஒரு திருநங்கை, “ஆனா சாமி... நாங்க ஆம்பளைங்க பக்கத்திலே உட்கார முடியாது. பொம்பளைங்க பக்கத்திலேயும் உட்கார முடியாது. பப்ளிக் டாய்லெட்டுலகூட இரண்டு பக்கமும் விட மாட்டேங்குது கஸ்மாலாங்க..!” சலித்துக் கொண்டாள்.

”எங்களை மூன்றாவது இனமாக அறிவிச்சு, தனி டாய்லெட்ல இருந்து வேலை வாய்ப்பு வரைக்கும் ஒதுக்கீடு செய்யணும்...” இன்னொருத்தி ஆவேசமாகக் குரல் கொடுத்தாள்.

மெள்ள சிரித்துக் கொண்டே, “மூன்றாவது இனமாக அறிவித்தால் பிரச்னைகள் கூடுமே தவிர குறையாது. அதனால்தான் உங்களைக் குழந்தையாக மாறுங்கள் என்கிறேன். ஆண், பெண் இரண்டு இனமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய, யாருக்கும் தீங்கு செய்யாத குழந்தைகளாக மாறுங்கள்...”

”எப்படி சாமி, குழந்தைன்னா... மொட்டைக்கட்டையாவா? இப்பவே பாடாப் படுத்துறானுங்க, அதுவும் போலீஸ்காரப் பசங்க தொல்லை இருக்கே... எங்களைத் தடவலைன்னா அவன்களுக்குத் தூக்கமே வராது...” என்று ஒருத்தி ஆத்திரமானாள்.

”வழி தெரியவில்லை என்றால் தவறான வழிகளில்தான் பிழைக்க வேண்டுமா?

“ஆனா சாமி... நாங்க ஆம்பளைங்க பக்கத்திலே உட்கார முடியாது. பொம்பளைங்க பக்கத்திலேயும் உட்கார முடியாது. பப்ளிக் டாய்லெட்டுலகூட இரண்டு பக்கமும் விட மாட்டேங்குது கஸ்மாலாங்க..!”

கைதட்டி பிச்சை எடுப்பது, ஆண்களுக்கு வடிகாலாக இருப்பது, கூட்டமாக சேர்ந்து மிரட்டி காசு பார்ப்பது தவிர வேறு வழிகளில் வாழமுடியாதா?”

‘’நாங்க ரெடிதான், ஆனா... என்ன வேலைக்குப் போனாலும் கடைசியில மண்டி போட்டுத்தான் உட்கார வைக்கிறாங்க...”

“உனக்கு மட்டும் இந்த பிரச்னை இல்லை, வேலைக்குப் போகும் அத்தனை பெண்களுக்கும்தான். ஆனால், கொத்து வேலைக்குப் போகும் பெண்களைப் போலவோ அல்லது இட்லி, வடை சுட்டு விற்பவர்களைப் போன்றோ கஷ்டப்பட நீங்கள் தயாராக இல்லை. தங்கள் சக்திக்கு மீறி சுட்டுப் பொசுக்கும் வெயிலில் தார் ரோடு போடுபவர்களைப் பார்த்திருப்பீர்கள். தள்ளாடும் வயதிலும் பால் பாக்கெட் போடும் கிழவிகள், மாடு போன்று மூட்டைகளைத் தூக்கித் திரியும் ஆண்களை எவரும் துன்புறுத்துவதில்லை, கேவலப்படுத்துவம் இல்லை. இதுபோன்று கடினமாக உழைக்கத் தயாராக இல்லாத நீங்கள், உங்களை எல்லோரும் மதிக்க வேண்டும் என்று மட்டும் நினைக்கிறீர்கள். தனியாக உழைக்க பயந்துகொண்டு, கூட்டமாக சேர்ந்து எளிதாக வாழ முடியும் என ஆசைப்படுகிறீர்கள்.”

### மந்திரச்சொல்

பிறரை மன்னிக்கும் நேரத்தில்தான், உன்னுடைய காயம் குணமடைகிறது.

அவர்கள் அடிமனதில் இருந்த அவஸ்தையை தொட்டது, அவர்களை நெருடியிருக்க வேண்டும். சில நிமிடங்கள் பெட்டியில் இறுக்கமான அமைதி நிலவியது. அதை உடைத்துக்கொண்டு கிளம்பியது ஒரு திருநங்கையின் குரல்.

’’எங்களை மாதிரி பிறவிகளுக்கு சொந்த வீட்லகூட மரியாதை இல்ல சாமி... என் கூடப்பிறந்த தங்கச்சியே, ‘வீட்டை விட்டு வெளியே போடா பொட்டை’னு சொல்லிட்டா. இப்பக்கூட அதை நினைச்சா தற்கொலை பண்ணிக்கத்தான் தோணுது...’’ என்று சொன்னவளை ஆதரவுடன் தடவிக்கொடுத்தேன்.

”உலகில் எந்த மிருகமாவது அல்லது பறவையாவது தற்கொலை செய்து கொண்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறாயா? ஊனமுற்றவர்கள்கூட வாழ்க்கையுடன் போராடி எதிர்த்து நிற்கும்போது, உங்களுக்கு மட்டும் ஏன் வாழ்க்கையின் மீது இத்தனை பயம்? வாழ்கை என்பது இயற்கை பரிமாறியிருக்கும் அற்புதமான விருந்து. அதைக் கடைசிவரை ரசித்து ருசித்து சாப்பிடுவதை விடுத்து, பாதியிலேயே புறக்கணிப்பது இயற்கைக்கு செய்யும் துரோகம்....’’ மென்மையாக சொன்னார்.

”சாமி எங்களை ஏத்துக்கவும், வழிகாட்டவும் யாருமே இல்லை. எங்கள் கூட்டத்தில் இருக்கிறவங்களே... எங்களை

"சாமி எங்களை ஏத்துக்கவும், வழிகாட்டவும் யாருமே இல்லை. எங்களை ஏமாத்துறாங்க, மிரட்டுறாங்க. ஆனா இந்தக் கூட்டம்தான் ஆதரவா இருக்கிறது. இதையும் விட்டா எங்களுக்கு வேற நாதியில்லையே..."



**மந்திரச்சொல்**

வாழ்க்கை உனக்கு மீண்டும் மீண்டும் வாய்ப்பு கொடுத்துக் கொண்டே இருக்கும். ஆம், அதுதான் நாளை.

ஏமாத்துறாங்க, மிரட்டுறாங்க. ஆனா இந்தக் கூட்டம்தான் ஆதரவா இருக்கிறது. இதையும் விட்டா எங்களுக்கு வேற நாதியில்லையே..." ஆற்றாமையுடன் வந்தது பதில்.

"கூட்டம்தான் பலம் என நினைக்காதீர்கள். முதலில் தனித்தனியாக வாழ்க்கையை நேருக்கு நேர் சந்தியுங்கள். தனித்தனியாக ஜெயிக்க வேண்டும். தனித்தனியாக உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் பாருங்கள். அதில் ஒருவர் வெற்றியடைந்தால், அந்த பாதையில் உங்கள் கூட்டத்தினர் ராஜநடை போட்டு வருவார்கள். உங்களைப் பற்றி இந்த சமூகம் குத்தியிருக்கும் முத்திரையை அழியுங்கள். இது அவ்வளவு சுலபமில்லை. ஆனால் மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. எத்தனையோ திருநங்கையர் போலீஸாக, ஆசிரியராக மாறியிருக்கிறார்கள். உங்களாலும் முடியும் என்ற நம்பிக்கையுடன் களத்தில் இறங்குங்கள்..." என்றார்.

ஒருத்தி தயக்கத்துடன், "சாமி, எங்களுக்கு செக்ஸ் ஆசை அதிகமான்னு தெரியலை, ஆனா... அவமானப்பட்டாலும் திரும்பி அங்கேதான் போறோம்..."

"இந்த உலகில் எதுவும் தவறு இல்லை. நடுக்காட்டில் இருந்தால் என்ன செய்வாய், உன் பெற்றோர் முன்பு எப்படி இருப்பாய் என்றெல்லாம் நினைத்து கொஞ்சம் கொஞ்சமாக ஆசைகளை தள்ளிவை. வாழ்க்கையின் மீது ஆசையைக் காட்டு..."

அதன்பிறகு அங்கு அமைதிதான் பேசியது. ரயிலின் தாலாட்டு, அட்டகாசமான காற்று, தீவிரமான உரையாடல் எல்லாம் சேர்த்து ஒருத்தியை ஞானகுருவின் மடியிலே தூங்க வைத்துவிட்டது. இன்னொருத்தி முகம் கவிழ்த்து சிந்தனை முகத்துடன் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். மூன்றாமவள் ஞானகுருவின் முகத்தையே பார்த்தபடி மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்கத் தயாரானாள்.

எந்தக் கேள்வியை அவள் கேட்டு விடக்கூடாது என ஞானகுரு நினைத்தாரோ, அதைத்தான் அவள் கேட்டாள்.

"சாமி... என்னை உங்க அடிமையா... சிஷ்யையா ஏத்துக்கோங்க. நீங்க என்ன சொன்னாலும் செய்றேன்!" என்ற திருநங்கையின் கண்களில் பிரகாசம் ஜொலித்தது.

பொதுவாக அன்புக்கு, பணத்துக்கு மட்டுமல்ல யாரேனும் ஒரு மனிதனுக்கு அடிமையாகத் துடிப்பவர்களைப் பார்த்தாலே ஞானகுருவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வரும். ஆனால் இப்போது பரிதாபம் ஏற்பட்டது. புன்னகையில் அதை மறைத்துக் கொண்டு, "காற்றடிக்கும் திசையில் நகர்ந்து செல்லும் மேகம் நான். என்னை சிறையில் அடைக்க நினைக்காதே..." என்றார்.

"என்னய உங்ககூட வைச்சுக்கிட்டா அசிங்கம்னு நினைக்கிறீங்களா?" என்று மீண்டும் ஒரு கேள்வியை கோபமாக வீசினாள்.

"நீ அசிங்கம் அல்ல. இந்த உலகில் எந்த ஒரு படைப்பும் அசிங்கமாக இருக்க முடியாது. முதலில் இதுபோன்ற தாழ்வு மனப்பான்மையை மனதில் இருந்து புடுங்கி எறி. பிறர் அவமானப்படுத்தினால் அலட்சியப்படுத்து. உன்னிடம் இருக்கும் தனித்தன்மையை, திறமையை வைத்து எப்படி வாழ்க்கை நடத்தலாம் என்று சிந்தித்து செயல்படு. ஒரு வேளை தோல்வியடைந்து கீழே விழுந்தாலும், மீண்டும் எழுந்து நில், மீண்டும் நட... எல்லாம் நலமாகும். நீயும் தேவதையே" என்று திருநங்கையின் தலையில் கைவைத்தபடி கண்களை மூடினார் ஞானகுரு.





# புற்று நோய் தருமா சூரியக் கதிர்?



சூரிய ஒளியைவிட சிறந்த மருத்துவர் இந்த உலகில் இல்லை. ஆனால், அதைத்தான் எதிரியாக நினைத்து ஓடி ஒளிகின்றனர் மக்கள். சூரியக் குளியல் பற்றி இளம்பெண் ஒருவருக்கு பாடம் நடத்தினார் ஞானகுரு. சந்தேகம் விலகாமல் நின்ற இளம்பெண் மேலும் ஒரு கேள்வி எழுப்பினாள்.

"சாமி, சூரியக் கதிர் உடலில் பட்டுவிட்டால் புற்றுநோய் வரும் என்று சொல்கிறார்களே..?"

கடகடவென சிரித்தார் ஞானகுரு.

"இது உண்மை என்றால், வெப்ப நாடுகளில் பிறந்த எந்த ஒரு உயிரும் ஜீவித்திருக்க வாய்ப்பே இல்லை. இதுவரை எந்த விலங்கினமாவது, பறவையாவது புற்றுநோயால் பாதிக்கப்பட்டு பார்த்திருக்கிறாயா பெண்ணே. அவை சூரியனின் அன்புக் குழந்தைகள். உன் உடல் சூரிய வெப்பத்தை தாங்கிக்கொள்ளும் வரையில், சூரியக் கதிர்களை ஏந்திக் கொள்ளலாம். வைட்டமின் டி மற்றுமின்றி, உடன் மற்ற எல்லா வைட்டமின்களும் தேவையான அளவு உடலுக்கு கிடைப்பதற்கு உடலுக்கு அக்னியை மருந்தாகவே எடுத்துக் கொள்ளலாம். புற்று நோய்க்கு இன்னமும் மருத்துவக் காரணம் கண்டறியப்படவில்லை, அதுவரை சூரியனின் மீது பழி போடாதே.."

"அப்படியென்றால் உடல் சூடாகிவிடாதா..?"

"உன் உடலில் அக்னி குறையாமலும் மிகாமலும் இருப்பதற்கு இரண்டு வழி இருக்கிறது. முதலில் பின்னிரவுக்குள் தூங்கி அதிகாலையில் விழித்துவிடு. அதேபோன்று, நன்கு பசிக்கும் நேரத்தில் உணவை எடுத்துக்கொள்..."

"நிறைய தண்ணீர் குடிக்க வேண்டுமா..?"

"தாகம் எடுக்கும்போது மட்டுமே தண்ணீர் குடித்தால் போதும். உடலுக்குத் தேவை என்றால் கேட்டு பெற்றுக்கொள்ளும்.. அக்னி தத்துவம் உன் உடலில் சமநிலையில் இருக்கும் வரையில் புற்று நோய் மட்டுமல்ல, தோல் நோயும் நெருங்கவே செய்யாது. தைரியமாக சூரியனை மருத்துவனாக ஏற்றுக்கொள் பெண்ணே..."" இளம் பெண் கண்களில் சூரியக் கதிர் வீசியது.

# ஞானகுரு பதில்கள்

**? காக்கையின் வடிவில் முன்னோர் வருவதாக சொல்லப்படுவது உண்மையா?**

**- என்.நாகராஜன், விருத்தாசலம்.**

**ஞானகுரு :**

நீ வைக்கப்போகும் கைப்பிடி அளவு சோறுக்காக முன்னோர்கள் காகமாக மாறிவந்து பிச்சை எடுப்பார்கள் என்று நம்புகிறாயா..? காகங்களை உன் முன்னோர் என்று நம்பினால், அவர்களுக்கு நீ எத்தகைய வரவேற்பும், கவனிப்பும் கொடுக்க வேண்டும்..? ஆனால், ஒரு பிடி சோறு தாண்டி நீ எதுவும் முன்னோருக்குத் தரமாட்டாய். இன்னும் சொல்லப்போனால் செத்துப்போனவர்கள் திடீரென உயிரோடு திரும்பிவந்தால், நீ வரவேற்க மாட்டாய். பயந்துபோய் அவர்களை அடித்துத்தான் விரட்டுவாய். அதனால், நீ ரொம்பவும் நல்லவன் போன்று காட்டிக்கொள்வதற்காக காகங்களுக்கு உணவு அளிக்காதே. காகம் சாப்பிடவில்லை என்றாலும், நீ சாப்பிடத்தானே போகிறாய். பம்மாத்து எதற்காக..?



**? நம்முடைய ஆத்மாவுக்கு அழிவே இல்லை என்கிறார்கள். ஆனால் ஆத்மாவைப் பற்றி நமக்கு எதுவுமே தெரிவதில்லை, புரிவதில்லை. பிறகு எப்படி அதனை மேம்படுத்துவது?**

**- சி.ரா.செல்வராஜ், ரோசல்பட்டி.**

**ஞானகுரு :**

கிணற்று மீனுக்கு கடலின் நீள அகலம் பற்றி எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் புரியாது. கடல் என்பதை ஒரு மிகப்பெரிய கிணறாகத்தான் கற்பனை செய்ய முடியும். அதுபோல், உன் மூளையின் ஆய்வுக்கும் ஓர் எல்லை உண்டு. எல்லாம் அறிந்துகொள்ளும் ஆற்றல் அதற்கு இல்லை. எனவே, உனக்கு தெரிந்த விஷயங்களை மட்டும் பார் அது போதும். ஆத்மா பற்றி அறிந்துகொள்ள சித்தர்களும், ஞானிகளும் காலம் முழுவதும் அலைந்தும், தேடியும் எதுவும் அறிந்து கொண்டது இல்லை. அதனால். உனக்கு நீ நல்லவனாக வாழ்ந்து வா... அது போதும். ஆத்மா என்ற ஒன்று இருந்தாலும், அது அதைத்தான் எதிர்பார்க்கும்.





**? சின்ன வயதில் இருந்தே பிள்ளைகளை பூஜை, விரதம் என்று பழக்கப்படுத்துவது நல்லதுதானே?**

**- ஏ.எழிலரசி, சாத்தூர்.**

**ஞானகுரு :**

நீ எதையும் பிள்ளைகளுக்கு கற்றுத்தர வேண்டியதே இல்லை. நீ என்ன செய்கிறாயோ, அதையே அவர்களும் பின்பற்றுவார்கள். உன் பெற்றோர் செய்த வழிபாட்டு முறையை நீ கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொண்டது போல், உன் பிள்ளைகளும் செம்மறி ஆடு போல் தொடரத்தான் செய்வார்கள். உன் பிள்ளை அப்படித்தான் வளரவேண்டும் என்று விரும்புகிறாயா..? நீ செய்யும் பூஜை, விரதம் போன்றவைகளை உன்னுடன் நிறுத்திக்கொள். குழந்தையிடம் வலுக்கட்டாயமாகத் திணிக்காதே. அவனுக்குத் தேவையான கடவுளை அவனே தேடி கண்டுபிடிக்கட்டும். அது தவறாக இருந்தாலும் அவனே திருந்தி சரியான வழியை அடைவான்.



**? பெற்றோர் பெருமைப்படும் அளவுக்கு நன்றாகப் படித்து நல்ல வேலையில் இருக்கிறேன். எனக்கு ஏற்ற மனைவி கிடைத்திருக்கிறாள் ஆனாலும் மற்ற பெண்கள் மீது சபலம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனை எப்படி கட்டுப்படுத்துவது?**

**- பெயர் வெளியிட விரும்பவில்லை, சென்னை.**

**ஞானகுரு :**

நிம்மதியும் சொகுசும் எல்லோருக்கும் கிடைப்ப தில்லை. கிடைத்தவர்களுக்கோ, அதனை அனுபவிக்கும் மனநிலை வாய்ப்பதில்லை. நீயும் அப்படித்தான். பணம் இருக்கும் திமிரில் ஊர் மேய ஆசைப்படுகிறாய். இதனை கட்டுப்படுத்துவது மிகவும் எளிது. உன் மனைவி, உன் அன்னை, உன்னுடைய கடவுள் ஆகியோரிடம் உன் ஆசையை சொல். அவர்கள் தீர்த்துவைப்பார்கள்.


**? மந்திரங்கள் பலன் தருமா? மந்திரங்களின் அர்த்தம் தெரியாமல் சொல்வது தவறு இல்லையே?**

**- என்.ரகோத்தமன், பாவாலி.**

**ஞானகுரு :**

ஒரு ரவுடியின் காலை மிதித்துவிட்டு, ‘மன்னிச்சுக்கோங்க... தெரியாம மிதிச்சிட்டேன்’ என்று மனதார மன்னிப்பு கேட்டால், அவன் நிச்சயம் மன்னிப் பான். ஆனால், ‘காலு லேசாத்தானே பட்டுச்சு... முறைச்சா எப்படி...’ என்று திமிருடன் நகர்ந்தால், அடுத்து என்ன நடக்கும் என்று சொல்லத் தேவையில்லை. எனவே உன் வாயில் இருந்து வரும் வார்த்தைகளைப் பொறுத்துத்தான், அதற்கான பலன் இருக்கும். வெறுமனே மந்திரத்தை 1008 முறை உச்சரிப்பதால் மட்டும் எதுவும் நிகழ்ந்துவிடாது. எந்த இறைவனும் உன்னுடைய தொண தொணப்பைக் கேட்க விரும்பமாட்டான். மந்திரத்துக்கு அர்த்தம் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும், அதில் எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை.





**? துறவி, சித்தர் போன்றவர்களுக்கும் உடல் உபாதை ஏற்படத் தானே செய்கிறது. இதனை ஏன் தவிர்க்க முடிவதில்லை?**

**- சி.சண்முகசுந்தரம், பொள்ளாச்சி.**

**ஞானகுரு :**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் உடலால் வரும் இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். சாமியார், சம்சாரி என்ற பேதமெல்லாம் உடலுக்கு இல்லை. ஆனால் நோய் வந்தவுடன் மருத்துவரைப் பார்த்து சரிசெய்ய வேண்டும் என்ற அக்கறையும் துடிப்பும் சம்சாரியிடம் இருக்கும். உடலை சீர் செய்யவேண்டிய பொறுப்பு உடலுக்குத்தான் உண்டு என வேதனையைத் தாங்கும் இதயம் வாய்த்தால்தான், அவன் துறவி.

**? சித்தர்கள் போன்று பற்றற்ற நிலையில் வாழ்வது எப்படி?**

**- பி.சங்கரநாராயணன், கடலூர்.**

**ஞானகுரு :**

பயிற்சியும் முயற்சியுமே விரும்பும் பலன் தரக்கூடியவை. மைதானத்தில் இரவும் பகலும் ஆர்வத்துடன் பயிற்சி எடுப்பவனே, விளையாட்டு வீரனாக வர முடியும். அதுபோல் சொல், செயல், சிந்தனை மூன்றும் ஒன்றிணைந்து செயல்பட்டால், இவ்வுலக வாழ்க்கையில் பற்றற்ற நிலையில் செயல்பட முடியும். வாழ்க்கையின் மீது பற்றும் ஒட்டுதலும் இல்லாதவனுக்கு வெற்றியும் தோல்வியும் ஒன்றுதான். ஜனனமும் மரணமும் சமம்தான். பசியும் அவமதிப்பும் துன்பம் தராது. இதைத்தான் நீ விரும்புகிறாய் என்றால், முயற்சி செய்து பார். சித்தனாக கானகம் செல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை. உன் வீட்டில் இருந்துகொண்டே, உன் உறவுகளுடன் பேசிக்கொண்டே தனித்து வாழு.



www.gyanaguru.com

? காசிக்குப் போய் கங்கையில் குளித்துவிட்டு வந்தால் என் வாழ்க்கை முழுமை அடைந்துவிடும் என்று நம்புகிறேன். ஆனால் நான் காசிக்குச் செல்ல குடும்பத்தினர் அனுமதி மறுக்கிறார்கள், என்ன செய்வது?

**- எஸ்.ப்ஸ்ரீதர், சூலூர்.**

**ஞானகுரு :**

அடேங்கப்பா... வீட்டுக்கு அடங்கிய நல்ல பிள்ளை போல் பேசுகிறாய். தும்மலையும் ஆன்மிக வெறியையும் எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. காசிக்கு சென்று கங்கா ஸ்நானம் செய்யவேண்டும் என்ற ஆசை உண்மையாக இருந்தால், இன்று இரவே எவருக்கும் சொல்லாமல், எதையும் எடுத்துக்கொள்ளாமல் கிளம்பு. கயிறுகளால் காற்றை கட்டிவைக்க முடியாது. இரட்டை மனநிலையில் உள்ளவர்தான், பிறர் மீது பழி போடுவார்கள்.



# ஞானகுரு பதில்கள்



? எந்த வயதுக்குப் பிறகு மாமிச உணவு எடுத்துக்கொள்வதை நிறுத்த வேண்டும்?

**- ஏ.கந்தசாமி, பாலவனத்தம்.**

**ஞானகுரு :**

பற்கள் முளைக்கும் வரையிலும், பற்கள் முழுமையாக விழுந்த பிறகும் திரவ உணவு அதிகமாகவும், அவித்த திட உணவு மிதமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தந்த பருவத்தில் விளையும் காய், கனிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மற்றபடி அசைவமும் சைவமும் உன் விருப்பம். உணவுக்கும் வயதுக்கும் இறைவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.



? என்னுடைய மகளை இந்த வருடம் பள்ளியில் சேர்க்க இருக்கிறோம். பெண் பிள்ளைகள் மட்டும் படிக்கும் பள்ளியில் சேர்ப்பதா அல்லது ஆண்களும் சேர்ந்து படிக்கும் பள்ளியில் சேர்க்கவா?

**- எஸ்.நாகராஜ், நாகர்கோவில்.**

**ஞானகுரு :**

ஆண் என்பவன் சக மனிதன் என்பதைப் புரிந்துகொண்ட பெண்ணாக உன் மகள் வளரவேண்டும் என்று நினைத்தால் இருபாலர் பள்ளியில் சேர்த்துவிடு. ஆண் எங்காவது தென்படுகிறானா என்று ஆசையுடன் தேடும் பெண்ணாக வளர்க்க ஆசைப்பட்டால் கண்டிப்பு அதிகம் காட்டும் பெண்கள் பள்ளியில் சேர்.





? இன்று வீட்டுக்கு ஒரு பிள்ளை என்று ஆகிவிட்டது. இந்த நிலையில் எதிர்காலத்தில் அந்தப் பிள்ளை பெற்றோரை காப்பாற்றாவிட்டால் என்னவாகும்?

**- எம்.சிவசங்கரி, கோவிலூர்.**

**ஞானகுரு :**

பிள்ளைகளைப் பெறுவதும் வளர்ப்பதும் இயற்கை நியதி, இதற்கு கூலி வாங்க நினைத்தால் ஏமாற்றம்தான் மிஞ்சும். எந்த விலங்கும், பறவையும் முதிய வயதில் பிள்ளையை நம்பி வாழ்வதில்லை என்பதை புரிந்துகொள்.



? வாழ்க்கையில் ஜெயிக்க எதை விட வேண்டும்? எதைத் தொடவேண்டும்?:

**- பி.பட்டுமுத்து, மதுரை.**

**ஞானகுரு :**

வாழ்க்கையில் ஜெயிக்கவேண்டும் என்ற ஆசை இருப்பது மட்டும் போதாது. அப்படி உன்னிடம் ஆசை மட்டும் இருந்தால், அதை அப்படியே விட்டுவிடு. வாழ்க்கையில் ஜெயித்தே தீருவேன் என்ற வெறியைத் தொடு, வாழ்க்கை வசப்படும்.




? எப்படிப்பட்ட குருவை தேட வேண்டும்? குருவை வணங்குவது தவறா...?

**- எஸ்.ஆனந்தவல்லி, விருதுநகர்.**

**ஞானகுரு :**

நீ விரும்புவதை பேசும் குருவை நம்பாதே. சுகமான வாழ்வை வெறுக்கச் சொல்லும் பகட்டு குருவை நம்பாதே. உன்னிடம் காணிக்கை பெற்று, அதனை இறைவனுக்கும் இல்லாதவருக்கும் கொடுக்கப்போகிறேன் என்று டொனேஷன் வாங்கும் குருவை நம்பாதே. என்னுடன் எத்தனை பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள் பார் என்று விளம்பரப்படுத்தும் குருவை நம்பாதே... வாழ்க்கை முழுவதும் இன்பமும் துன்பமும் கலந்தே இருக்கும் என்ற உண்மையை நெத்தியில் அடிப்பதுபோல் கூறுபவரின் கருத்துக்களை கேள். அவருடைய பொக்கிஷத்தை கற்றுக்கொண்டதும் நகர்ந்துவிடு. ஒரு நல்ல குரு யாரையும் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள மாட்டார். அவருக்குத் தெரியும், எல்லோரும் குருவாக இருப்பதற்கு தகுதியானவர்கள் என்பது.



? சாலை விபத்துகளுக்குக் காரணம் மனிதனின் அறியாமையா?

**- எம்.சந்திரமோகன், பெரியகுளம்.**

**ஞானகுரு :**

ஒருவரின் அலட்சியம் இரண்டு குடும்பத்தை பாழாக்கிவிடுகிறது. சாலை விதிகளை நீ மட்டும் கடைபிடிப்பது போதாது, எதிரே வருபவனும் அப்படியே நடக்க வேண்டும். ஆனால், மனிதர்கள் எல்லோருமே சுயநலமிகள்.. தனக்கு தேவை ஏற்படும்போது மூன்று நபர்களுடன் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பதும், ஒருவழிப் பாதையில் செல்வதும் தவறாக எவருக்கும் தெரிவதே இல்லை. தன்னால் கண் விழித்து நீண்ட நேரம் ஓட்டுவதற்கு முடியும் என்று நினைப்பவனும், எத்தகைய சூழலிலும் என்னால் வேகத்தை கட்டுப்படுத்த முடியும் என்று நினைப்பவனும்தான் விபத்துக்கு முக்கிய காரணம். எனவே, விபத்துக்குக் காரணம் அறியாமை அல்ல, அதிக நம்பிக்கை.

# ஞானகுரு பதில்கள்



**? இந்த நிமிடத்தை ரசித்து வாழ்வது எப்படி?**

**- யு.மீனா, முத்துராமன்பட்டி.**

**ஞானகுரு :**

ஒரு நதியில் இரண்டு முறை கால் நனைக்க முடியாது என்பார்கள். இரண்டாவது முறை கால் நனைக்கும்போது, முதல் முறை உன்னை நனைத்த நீர் காணாமல் போயிருக்கும். இதுதான் இந்த நிமிடத்தில் வாழ விரும்புபவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய தத்துவம். ஒப்பீடுகளை தவிர்ப்பதுதான் இந்த நிமிடத்தில் வாழ்வதற் கான முதல் படி. உறவினர் வீட்டுக்குச் செல்லும்போது, சுற்றுலா போகும்போது, ஒரு சினிமா செல்லும் போது உன் பழைய அனுபவங்களை, எதிர்பார்ப்புகளை நெஞ்சில் ஏந்தாதே. தினமும் புதிதாய் பிறப்பது போல் எழுந்திரு... வீடு, குழந்தை, உறவு, நட்பு, ஊழியர்கள் அனைவரும் புதிதாகத் தெரிவார்கள்... நீயும் நிகழ்காலத்தில் வாழ முடியும்..

**? மனுநீதிச் சோழன் போன்று இப்போது வாழ முடியுமா?**

**- பி.ரத்தினம்மாள், சிவகாசி.**

**ஞானகுரு :**

மனுநீதிச் சோழன் ஒரு முட்டாள். தெரியாமல் செய்வது தவறு, தெரிந்து செய்வது தப்பு. சோழனின் மகன் சிறுவன், அறியாமல்தான் தேர்க்காலில் கன்றை ஏற்றிக் கொன்றான். அறியாமல் தவறு செய்த சிறுவனுக்கு மரண தண்டனை கொடுப்பது பைத்தியக்காரத்தனம். தன்னை மக்கள் புகழ்ந்து பேசவேண்டும் என்பதற்காக ஒரு சிறுவனைக் கொலை செய்த குதர்க்கவாதியை போல யாரும் வாழவே வேண்டாம்.






**? மகிழ்ச்சி வரும்போது யாரையும் நினைக்கத் தோன்றுவது இல்லையே... ஏன்..?**

**- சி.சுந்தரராஜன், கோவில்பட்டி.**

**ஞானகுரு :**

மகிழ்ச்சிக்குக் காரணம் நான் மட்டும்தான் என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. தன்னுடைய உழைப்பால், தன்னுடைய முயற்சியால் மகிழ்ச்சி உண்டானதாக நினைப்பதால், பங்குபோட எவரையும் அழைப்பதில்லை. துன்பம் பிறரால் வருவதாக நினைக்கிறான், அதனால்தான் தன் துன்பத்தை மட்டும் பங்குபோட ஆசைப்படுகிறான்.

**? எனது பணியில் வாழ்க்கை அவசரயுகமாக கழிகிறது, இந்த பரபரப்பில் வாழ்க்கையைத் தொலைத்துவிடுவேனா..?**

**- கே.ராசாத்தி, சூரங்குடி.**

**ஞானகுரு :**

பரபரப்பாக இருப்பது ஒரு வரம். உனக்குக் கிடைத்த வரத்தை அனுபவித்து வாழ், தப்பிக்க நினைக்காதே. ஏனென்றால் சோம்பேறி வாழ்வு மிகவும் துயரமானது.

**? இவ்வுலகில் நிம்மதியாக வாழும் மனிதர்கள் உண்டா?**

**- டி.வாசுகி, மைட்டான்பட்டி.**

**ஞானகுரு :**

கட்டில், மெத்தை, கொசுவர்த்திச் சுருள் போன்ற எந்த வசதிகளும் இல்லாமல் ரோட்டோரங்களில், ஓடும் வாகனங்களில், பணி நேரங்களில் தூங்கும் மனிதர்களை தேடி தரிசனம் செய். நிம்மதி என்பது பணத்திலோ, புகழிலோ இல்லை என்பது புரியும்.



**? மரணத்தை விரும்பி ஏற்பவர்கள் யார்?**

**- பி.கனகலட்சுமி, பாண்டிச்சேரி**

**ஞானகுரு :**

உயிர் மீது ஆசை வைப்பதுதான் உயிரிகளின் பண்பு. உயிர் வாழப் போராடுவதுதான் வாழ்க்கை. அவநம்பிக்கையாளர் மட்டுமே மரணத்தை தேடுவார், விரும்பி ஏற்பார். தற்கொலை செய்துகொள்ளும் ஒவ்வொரு நபரும் அவநம்பிக்கையாளரே..



**? மறுஜென்மம் உண்டா?**

**-எஸ்.விவேக், காமராஜர்புரம்**

**ஞானகுரு :**

விதையின் மரணம் மரமாகிறது. மேகத்தின் மரணம் மழையாகிறது. காலகாலமாக நடக்கும் இந்த சுழற்சியினால் பிரபஞ்சத்தில் உருவான எதுவும் முற்றிலும் அழிவதில்லை. ஓர் அழிவு மற்றொன்றின் தொடக்கம் என்பதால் ஸ்தூல உடலுக்கும் சூட்சும உடலுக்கும் அழிவே கிடையாது. அடுத்த ஜென்மம் இருந்தாலும் அதனை உன்னால் அறியமுடியாது. அறிவதற்கு அவசியமும் இல்லை. அதனால் இந்த ஜென்மத்தை நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு முயற்சி செய், மறுஜென்மத்தை இறைவன் பார்த்துக்கொள்வார்.



**? ஆதி சங்கரர், ராமானுஜர், ராமகிருஷ்ணர், ஷீரடி சாய்பாபா, மகா பெரியவர் என்று எத்தனையோ குருமார்கள் சர்ச்சை இன்றி நடமாடிய நாடு இது. இன்றைய ஆன்மிகவாதிகள் மீது மட்டும் ஏன் இத்தனை குற்றச்சாட்டுகள்?**

**- காவேரி மாணிக்கம், காஞ்சிபுரம்**

**ஞானகுரு :**

இறந்துபோன ஒருவரைப் பற்றித் தவறாகப் பேசக்கூடாது என்பது நம் பண்பாட்டின் கேவலமான மரபு. அதனால்தான் செத்துப் போன சாமியார்கள் புனிதர் களாகவும் இப்போது இருப்பவர்கள் அயோக்கியர் களாகவும் தெரிகிறார்கள். தன்னை கடவுள் என்று சொல்பவனும், தன்னை கடவுள் போல் பூஜிக்க அனுமதிப் பவனும் நிச்சயம் புனிதமானவன் இல்லை. ஐம்பது வருடங்கள் கழித்து இன்றைய சாமியார்கள் எல்லாம் புனிதர்களாக போற்றப்பட்டாலும் ஆச்சர்யம் இல்லை.



**? கடவுளை நான் எங்கே தேடவேண்டும்?**

**- ஜி.பார்த்தசாரதி, நெல்லை.**

**ஞானகுரு :**

நீ குழந்தையாக இருந்தவரை, கடவுள் என்றால் என்னவென்றே அறியாமல் இருந்தாய். எப்போது கடவுள் பற்றி உனக்குக் கற்பிக்கப்பட்டதோ, அன்று முதல் கோயில்களிலும், குளத்திலும், பூஜை அறையிலும் தேடத் தொடங்கிவிட்டாய். தொலைந்து போன பொருட்கள் மட்டுமே தேடினால் கிடைக்கும். கடவுளை உன்னால் தொலைக்க முடியுமா என்ன..? அதுசரி, கடவுளைத் தேடி கண்டுபிடித்து என்ன செய்யப் போகிறாய்? அதை முதலில் முடிவு செய்துவிட்டு தேடு.

# ஒரு மாணவன் தற்கொலை

## யாருடைய தவறு..?



எட்டாம் வகுப்பு படிக்கும் செல்வத்தின் மீது அவனது பெற்றோருக்கு அத்தனை பெருமை. வகுப்பில் அவனே எப்போதும் முதல் மாணவன். அதனால், அவன் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள். எல்லாம் நன்றாகத்தான் போய்க்கொண்டு இருந்தது, அவர்களது பக்கத்து வீட்டில் பூபேஷ் வந்து சேரும் வரை.

ஆம், வங்கி உயர் அதிகாரி ஒருவர், செல்வத்தின் வீட்டுக்கு அருகே குடி வந்தார். அவர்களுடைய மகன் பூபேஷை செல்வம் படிக்கும் பள்ளியில் சேர்த்தார்கள். அவன் 7ம் வகுப்புதான். ஆனால், படிப்பிலும் விளையாட்டிலும் படு சுட்டியாக இருந்தான்.

தேர்வு முடிவு வந்தபோது செல்வம் எப்போதும்போல், முதல் மாணவனாக வந்திருந்தான். 500 மதிப்பெண்களுக்கு 468 மதிப்பெண்கள் எடுத்திருந்தான். ஆனால், பூபேஷ் அவன் வகுப்பில் 500க்கு 480 மதிப்பெண்கள் எடுத்து முதல் மாணவனாக வந்திருந்தான். அவ்வளவுதான், செல்வத்துக்கு வீட்டில் அதுவரை கிடைத்துவந்த பாராட்டுகள் அத்தனையும் திடீரென பறி போனது.

இன்னும் அதிகமாக படி படி என்று தொந்தரவு செய்தார்கள். பூபேஷை விட கூடுதலாக மதிப்பெண் வாங்க வேண்டும் என்று தினம்தினம் சொன்னார்கள். ஒரு கட்டத்தில் அவனால் இந்த பிரஷர்களை தாங்க முடியவில்லை. அடுத்த தேர்வில் இரண்டாம் இடத்துக்குப் போய்விட்டான் செல்வம்.

வீட்டில் கொஞ்சநஞ்ச அடி என்று சொல்லமுடியாது. கட்டிவைத்து அடித்தார்கள். அதனால், அன்று இரவு தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டான். அதன்பிறகு செல்வத்தின் பெற்றோர் என்னென்னவோ சொல்லியெல்லாம் அழுதார்கள். செத்தவன் என்றைக்கு திரும்பி வந்திருக்கிறான்.

"வயதில் முதிர்ச்சியடைந்த பெற்றோர்களுக்கே எதற்காக படிக்கச் சொல்கிறோம் என்பதில் தெளிவு இருப்பதில்லை. அந்த தெளிவை இள வயதினரிடம் எதிர்பார்க்க முடியாது."



**அப்படியென்றால், பிள்ளையை நன்றாக படி என்று சொல்வது தவறா...?**

இல்லவே இல்லை. நன்றாகப் படிக்கச் சொல்வது தவறு இல்லை. ஆனால், அக்கம்பக்கத்து வீட்டினருடன் ஒப்பிடுவதுதான் மன்னிக்கவே முடியாத குற்றம். ரோஜாவையும் மல்லிகையையும் ஒப்பிடுவது எப்படி ஏற்க முடியாதோ, அப்படித்தான் ஒவ்வொரு மாணவரையும் ஒப்பிட்டுப் பார்ப்பது. இந்த ஒப்பீடுதான் மன்னிக்க முடியாத குற்றம். வாழ்க்கையில் படிப்பு என்பது முக்கியமான ஒரு பகுதிதான். ஆனால், படிப்புதான் வாழ்க்கை என்பதில்லை. மாணவர் தற்கொலை இரண்டே விஷயங்களுக்குத்தான் நடக்கிறது. ஒன்று, இந்த படிப்பில் தோற்றுவிட்டால் தன்னுடைய எதிர்காலம் அழிந்து விடும் என்ற அச்சம் அல்லது இந்த தோல்விக்காக மாணவனுக்குக் கிடைக்கப் போகும் தண்டனை அல்லது அவமானம். இவற்றுக்காகத்தான் மாணவர்கள் தற்கொலை செய்கிறார்கள். ஒரு தோல்வியால் எந்த வாழ்க்கையும் மாறிவிடப் போவதில்லை, மானம் என்ற ஒன்று பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

**மாணவர்கள் தற்கொலையை ஏன் தேர்வு செய்கிறார்கள்?**

வயதில் முதிர்ச்சியடைந்த பெற்றோர்களுக்கே எதற்காக படிக்கச் சொல்கிறோம் என்பதில் தெளிவு இருப்பதில்லை. அந்த தெளிவை இள வயதினரிடம் எதிர்பார்க்க முடியாது. அதனால்தான், நன்றாக படிக்காதவன் மட்டுமின்றி நல்ல மதிப்பெண் பெற்று மருத்துவப் படிப்பில் சேர்ந்தவனும் தற்கொலை செய்துகொள்கிறான். தோல்வி அடைந்துவிட்டாலும் வாழ்வதற்கு எத்தனையோ வழிகள் இருக்கிறது என்பதை சொல்லிக் கொடுக்காத காரணத்தாலே தற்கொலையை ஒருவன் தேர்வு செய்கிறான். பரிட்சையில் தோல்வி அடைந்தால் பிள்ளையின் எதிர்காலமே அழிந்துவிட்டதாக கண்டிப்பதும் தண்டிப்பதும் பெற்றோர் செய்யும் மிகப்பெரிய தவறு. அறிவுக்கும், திறமைக்கும் மதிப்பெண்ணுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை பெற்றோர் முதலில் நம்ப வேண்டும். அதோடு, வாழ்க்கையில் சின்னச்சின்ன ஏமாற்றங்கள், தோல்விகள், தடைகளை தாங்கிக்கொள்வதற்கு குழந்தைகளை பழக்க வேண்டும்.

டாக்டராக ஆசைப்படுவது லட்சியமாக இருக்கலாம். போதிய மதிப்பெண் கிடைக்கவில்லை என்றால் மருத்துவத்துறை சார்ந்த பிற படிப்புகள் படிக்கலாம் என்பதை பக்குவமாக மனதில் பதியவைக்க வேண்டும். திட்டாமல், அடிக்காமல் பொத்திப்பொத்தி வளர்ப்பது முக்கியமல்ல. கல்லூரியில் ஆசிரியர்கள், மாணவர்கள் திட்டும்போது, பிரச்னைகள் வரும்போது அதனை சாதாரணமாக ஏடுத்துக்கொண்டு முன்னேறிச்செல்லும் மனநிலையை உருவாக்க வேண்டும். தோல்வியினால் கீழே விழும்போது, எழுந்துகொள்ளும வலிமையை மாணவன் வளர்ந்துக்கொண்டால், மரணத்தை தொட்டுப்பார்க்க விரும்பமாட்டான். முடிந்தவரை முயற்சிப்பதால் மட்டும் வெற்றி கிடைத்துவிடாது. முடிவு வரையிலும் முயற்சித்தால் மட்டுமே வெற்றி கிட்டும் என்ற உண்மை புரியவேண்டும்.

**மானம் என்பது முக்கியம் இல்லையா..?**

மானம் என்ற ஒன்று மனிதருக்குத் தேவையே இல்லை. அதுவும் மாணவருக்குத் தேவையே இல்லை. உயிர் வாழ்தலே உயிருக்கு முக்கியம். பொதுவாக மானம் என்பதை அக்கம்பக்கத்தினர், உறவுகளுக்காக மட்டுமே நம்புகிறார்கள். பூட்டிய வீட்டுக்குள் எது செய்தாலும் தவறு இல்லை, அந்த தவறு வெளியே தெரிந்தால்தான் மானம் போகிறது என்று முடிவு செய்வதாக நம்புகிறார்கள். வெற்றி அடைந்தால் மானத்துடன் வாழலாம், தோல்வி அடைந்தால் மானம் போய்விடும் என்று கற்றுக்கொடுத்தவர் யார்..? இந்த உலகில் நீ ஒரு தனிப்பிறவி. உன் வாழ்க்கை உன் கையில்தான் என்பதில் உறுதியாக இரு. வாழும் வரை போராடு. அதுதான் உயிர்களின் வாழ்க்கை தத்துவம்.







## கவித்துவம்

அன்பென்று ஏதுமில்லை
காதலென்று ஏதுமில்லை
காமம் என்று ஏதுமில்லை
பிறகு வேறெதெற்கு இவ்வளவும்?
தனியாக இருக்க பயப்படுகிறோம்
தனியாக இறக்க பயப்படுகிறோம்

- மனுஷ்யபுத்திரன்

# உனக்குத் தேவை பணமா குடும்பமா..?





ராதையும் ராமனுடன் தங்கள் குழந்தையுடன் கோயிலை சுற்றிப் பார்த்துவிட்டு, வசந்த மண்டபத்தில் அமர்ந்தனர்.

‘‘அடுத்த வாரம் குழந்தைக்கு பர்த் டே வருது, எப்படியாவது வேலையை தள்ளி வைச்சுட்டு வரப் பாருங்க..’’ என்று ராதை அடிக்குரலில் அழுத்தமாகப் பேசினாள்.

“எத்தனை தடவை சொன்னாலும் உனக்கு ஏன் புரிய மாட்டேங்குது, அன்னைக்கு முக்கியமான ஒரு மீட்டிங் இருக்குது. நான் போய்த்தான் ஆகணும்..” என்றதும் முகம் சுருங்கி திரும்பி அமர்ந்தாள். அவர்கள் சம்பாஷணையைக் கேட்டபடி அருகே படுத்திருந்த ஞானகுரு, “பணம் உன்னை ஓட வைக்கிறது. இந்த குழந்தைக்காகவும், குடும்பத்துக்காகவும் தானே ஓடுகிறாய்..?” என்று கேள்வியை வீசினார்.

இதனை எதிர்பாராத ராமன் சற்றே திகைத்தாலும், “ஓ... உங்களுக்கு தொந்தரவு தர்ற மாதிரி பேசிட்டோமா...? மன்னிச்சிடுங்க சாமி. உங்களுக்குத் தெரிஞ்சது, இவங்களுக்குத் தெரிய மாட்டேங்குது. சம்பாதிக்கிற வயசில் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சம்பாதிக்கணும், அதை கொஞ்சம் தெளிவா இவளுக்குத் தெரியுற மாதிரி சொல்லுங்க சாமி...”

‘‘எனக்கு பணமே வேண்டாம்...’’ கோபித்தபடி திரும்பியமர்ந்தாள் ராதை.

“உன் மகன் பிறந்த நாள் அன்று நடைபெறும் பிசினஸ் சந்திப்பு மூலம் உனக்கு எவ்வளவு பணம் கிடைக்கலாம்...”

“அப்படி குறிப்பிட்டு சொல்ல முடியாது சாமி... ஆனா அது ஒரு நல்ல டீல்..”

‘‘நீ இல்லைன்னா, வேறு யாராலும் அதை செய்ய முடியாதா..?”

“செய்யலாம் சாமி, என்ன இருந்தாலும் நாமே முடிக்கிற மாதிரி வருமா...? அடுத்த வருஷம் பிறந்த நாளை கொண்டாடிக்கலாம் நல்லா”

“அப்படியா..? ஒரு ரகசியம் சொல்கிறேன் கேள். நீ எந்த வருடமும் உன் குழந்தை பிறந்த நாளை அருகிலிருந்து கொண்டாட மாட்டாய் மகனே, ஏனென்றால் உனக்குத் தேவை பணம், குடும்பம் அல்ல...” என்று சொன்னதும் அதிர்ந்தான்.

“நீங்கதானே, பணம் முக்கியம்னு சொன்னீங்க.?”

“முக்கியம்தான். சாப்பிடவும், வீடு வாங்கவும், ஒரு கார் வாங்கவும் அவசியம்தான். மீண்டும் ஒரு வீடு வாங்கவும், இன்னொரு கார் வாங்கவும் நீ நேரத்தை ஒதுக்கிக்கொண்டே இருந்தால் எப்போதும் குடும்பம் உன் நினைவுக்கே வராது...”

குற்றவுணர்வுடன் தலை குனிந்தவன், “நான் எதுக்கு முக்கியம் கொடுப்பதுன்னு தெரியலையே சாமி... பணம் போயிடுமேன்னு பயமா இருக்குது..?” என்றான்.

“உன்னால் மட்டும்தான் ஒரு காரியத்தை நிறைவேற்ற முடியும் என்று நினைக்காதே. உனக்கு கீழே இருப்பவர்களுக்கு பொறுப்பை கொடு. அவர்கள் உன்னைவிட சிறப்பாக டீலை முடிக்கவும் வாய்ப்பு உண்டு. அப்படி இல்லாமல் போனது என்றாலும், நீ இழக்கப்போவது கொஞ்சம் பணம்தான். பணம் போனால் சம்பாதிக்க முடியும். குடும்பம் அப்படியல்ல மகனே. உன் குடும்ப சந்தோஷத்துக்கு நீ ஒதுக்கும் நேரத்துக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கணக்குப் போடு. அந்த நேரத்தில் நீ சம்பாதிக்கும் பணத்துக்கு ஈடாக, உன் மனைவியின் சந்தோஷமும், குழந்தையின் புன்னகையும் இருக்குமா என்று பார்... அவை போதாது என்று தெரிந்தால் நீ பணத்தையே தேடு” என்று அமைதியானார்.

கொஞ்சநேரம் அங்கு அமைதி நிலவியது.

‘‘இந்த வருஷம் குடும்பத்தோடு பிறந்த நாள் கொண்டாடப்போறோம், ஆசிர்வாதம் செய்யுங்க சாமி...” என்று எழுந்து வணங்கினான் ராமன்.

**மந்திரச்சொல்**

பிறர் பாராட்டும்வகையில் வாழ ஆசைப்பட்டால், உன் வாழ்க்கையை வாழவே முடியாது.



www.gyanaguru.com

## இதயத்துக்கு

# ஹலோ ஹலோ



ஒருவர் டாக்டரிடம் போய், ‘என் மனைவிக்குக் காது சரியாகக் கேட்கவில்லை. ஏதாவது மருந்து கொடுங்கள். அவர் டாக்டரிடம் வர மறுக்கிறார்’ என்று வேதனைப்பட்டார்.

உடனே டாக்டர், ‘அவரது காது கேட்கும் திறன் எப்படி இருக்கிறது என்பது தெரிந்தால்தான் மருந்து கொடுக்க முடியும். அதனால் எத்தனை அடி தூரத்தில் இருந்து பேசினால் அவரால் கேட்க முடிகிறது என்பதை அறிந்து வாருங்கள்’என்று அனுப்பினார்.

வீட்டு வாசலுக்குப் போனவர், ‘கீதா இன்னைக்கு என்ன சமையல்?’ என்று கேட்டார். உள்ளே இருந்து பதில் இல்லை.

அடுத்து ஹாலுக்குப் போனவர், ‘கீதா இன்னைக்கு என்ன சமையல்?’ என்று கேட்டார். அதற்கும் பதில் இல்லை. அடுத்து கிச்சனுக்குப் போனவர், ‘கீதா இன்னைக்கு என்ன சமையல்?’ என்று கேட்டார். அதற்கும் பதில் இல்லை. உடனே மனைவிக்கு எதிரே போய் நின்று, ‘கீதா இன்னைக்கு என்ன சமையல்?’ என்று கேட்டார்.

உடனே அவரது மனைவி, ‘வத்தக்குழம்புன்னு மூணு தடவை கத்தியும் காதுல விழலியா செவிட்டு முண்டமே’ என்று திட்டினார்.

இந்த நகைச்சுவையில் தெரிய வருவது என்னவென்றால், கணவரும் மனைவியும் ஒரே வீட்டில் இருந்தாலும் விலகியே இருக்கிறார்கள். அதனால்தான் யாருக்கு என்ன குறை என்பதை அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்.

நிறைய பேர், எதற்கெடுத்தாலும் குரல் உயர்த்திப் பேசுவார்கள். தாங்கள் சொல்வதுதான் சரி என்று அழுத்திப் பேசுவதற்காக குரல் உயர்த்துவார்கள். அப்படி ஒருவர், கத்திக் கத்தி பேசுவதால் மட்டும் எந்தக் காரியத்தையும் சாதித்துவிட முடியாது என்பதுதான் உண்மை. ஆம், மென்மையாகவும், தன்மையாகவும், அமைதியாகவும் பேசுவதுதான் உடலுக்கும் மனதுக்கும் நல்லது என்கிறது ஒரு மருத்துவ ஆய்வு.

காதலில் விழுந்த ஆணும் பெண்ணும் பேசிக்கொள்வதை கவனித்து இருக்கிறீர்களா? அவர்களுக்கு அருகே உட்கார்ந்து இருப்பவர்களுக்குக்கூட அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது கேட்காது. அத்தனை தூரம் மென்மையாகப் பேசுவார்கள். அதே போல் பாசத்துடன் அம்மாவும் பெண்ணும் பேசிக்கொள்வதைக் கேட்டு இருக்கிறீர்களா? அவர்கள் மணிக்கணக்காய் பேசினாலும் அடுத்தவர்களுக்குக் காதில் விழாது. அத்தனை மெதுவாகப் பேசுவார்கள்.

காதலில் விழுந்தவர்கள் தெருக்களில் செல்போனில் பேசிக்கொண்டே நடப்பார்கள். வண்டிகளின் இரைச்சல், ஆட்களின் கரைச்சல் இருந்தாலும் அவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பேசிக்கொண்டே நடப்பார்கள். நமக்கு அவர்கள் பேசும் சத்தம் கேட்காது என்றாலும் எதிர் முனையில் இருப்பவர்கள் தெளிவாகவே புரிந்துகொள்வார்கள்.

ஏன் தெரியுமா?

அவர்கள் தூரத்தில் இருந்தாலும் அவர்கள் இதயங்கள் நெருக்கத்தில் உள்ளன. இதயம் அருகருகே இருப்பதால் மெல்லப் பேசினாலே இருவருக்கும் கேட்கிறது. அதனால்தான் அன்பு இருப்பவர்கள் மெல்லப் பேசுகிறார்கள்.

அவர்களே சண்டை போடும்போது சத்தம் போட்டு கத்தி பேசுவதை பார்க்கலாம். கோபத்தில் அவர்கள் பேசும் வார்த்தைகள் எல்லோருக்குமே கேட்கும்படி இருக்கும். இதன் அர்த்தம் அவர்களுடைய இதயம் விலகியிருக்கிறது என்பதுதான். தூரத்தில் போய்விட்ட இதயத்துக்குத் தாங்கள் சொல்வது கேட்கவேண்டும் என்பதற்காகத்தான் உரக்கப் பேசுகிறார்கள். உரக்கப் பேசுவது இதயத்தை மேலும் மேலும் துன்புறுத்தக்கூடியது. அதனால்தான் சண்டை போடும்போது இருவரும் மூர்க்கமாகிறார்கள். சண்டை பிரிவாகிறது, பிரிவு வேதனையாகிறது.

எனவே, கருத்துவேறுபாடு ஏற்படும்போதும் அமைதியாகவும் அன்பாகவும் மென்மையாகப் பேசுவதற்கு கற்றுக் கொள்ளுங்கள். அப்படிப் பேசுவதைத்தான் இதயம் புரிந்துகொள்கிறது. வேறுபாடுகள் மறைந்துபோகிறது.

எத்தனை பெரிய பிரச்னை என்றாலும் அதனை அன்பான பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்க்க முடியுமே தவிர சண்டை போடுவதாலோ, உரக்கப் பேசுவதாலோ அல்ல. மெல்லப் பேசுங்கள்.




www.gyanaguru.com

# 3 ஆரோக்கியத்துக்கு ரகசியம்..!



மனிதர்களால் நிச்சயம் 100 ஆண்டுகள் வாழ முடியும் என்று ஏராளமான நபர்கள் நிரூப்பித்துக் காட்டியிருக் கிறார்கள். ஆனால், ஏன் எல்லோராலும் அப்படி வாழ முடிவதில்லை என்று கேள்வி கேட்டாள் சகுந்தலா.

''100 ஆண்டுகள் வாழும் அளவுக்கு மனித உடல் படைக்கப்பட்டுள்ளது என்று எந்த ஒரு மருத்துவமும் உறுதி செய்யவில்லை. ஒவ்வொரு உடலும் தனித்தன்மை வாய்ந்தது. 100 ஆண்டுகள் வாழ்வதற்கான ரகசியம் என்று எதுவும் இல்லை. சித்தர்கள் சொல்லி வைத்தது எல்லாம் ஆரோக்கிய குறிப்புகள் மட்டும்தான். ஆனால், வாழ்க்கையின் நீளத்தை நிச்சயம் அதிகரித்துக்கொள்ள முடியும். அதற்கான ரகசியத்தை சொல்கிறேன் கேள்.

இப்போது ஜப்பான் நாட்டில்தான் அதிக எண்ணிக்கையில் முதியவர்கள் அதிக ஆயுளுடன் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை முறையை அறிந்துகொண்டு பின்பற்றினாலே போதும்.

அவர்கள், மூன்று நேரமும் குறைந்த அளவு மட்டுமே உணவு எடுத்துக்கொள்கிறார்கள். பெரும்பாலும் கஞ்சி போன்று காய்ச்சிக் குடிக்கின்றனர். திட உணவு என்றால் மென்று தின்கின்றனர். நொருங்கத் தின்றால் நூறு வயது என்று நம்மவர்கள் சொன்னதைத்தான் கடைபிடிக்கின்றனர். உணவுதான் உடலின் ஆயுளைக் கூட்டும் முதல் சூத்திரம். ஹோட்டல் உணவுகளை யும் பாக்கெட் உணவுகளையும் முழுமையாக தவிர்த்துவிடு. உயிர் வாழ்வதற்காக மட்டுமே சாப்பிடு, ருசிக்காக சாப்பிடக் கூடாது.

அடுத்தது உறக்கம். எந்த நேரத்தில் எல்லாம் தூக்கம் வருகிறதோ, உடனே உறங்கிவிடு. கஷ்டப்பட்டு கண் விழித்து படிப்பதும், வேலை செய்வதும் உடலுக்கு பெரும் கேடு. குறிப்பாக பகலில் தூக்கம் வந்தாலும், தூங்குவதற்குத் தயங்காதே.

மனித உடலுக்கு நடையைத் தவிர சிறந்த பயிற்சி வேறு எதுவுமே இல்லை. வாகனங்களை முற்றிலும் தவிர்த்துவிடு. எங்கேயும் நடந்தே போ. சீரான பாதையில் மட்டுமே செல்வதைத் தவிர்த்து, மேடு, பள்ளம், மணல், மலை என்று சகல இடங்களிலும் நடந்து செல். இந்த மூன்றையும் கடைபிடிக்க முடிந்தால் நூறு ஆண்டுகளை நோக்கி நிச்சயம் செல்ல முடியும்" என்றதும் மலைத்து நின்றாள் சகுந்தலா.

**மந்திரச்சொல்**

மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு
கிடைக்கும் தோல்வி,
வெற்றியைவிட சிறப்பானது.

"நான் இதுவரை சொன்னது ஆரோக்கியத்துக்கான வழிகள். இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான ஒன்று இருக்கிறது. அதுதான் வலிமையான மனம். அதாவது, 100 ஆண்டுகள் நிச்சயம் வாழ வேண்டும் என்ற ஆசையும் விருப்பமும் உள்ள மனம். உடலைவிட மனம் மிகவும் முக்கியமானது..." என்று ஞானகுரு சொன்னதும் ஆச்சர்யமானாள் சகுந்தலா.

"அதெப்படி சாத்தியம். வலிமை இல்லாத உடலில் மனம் மட்டும் வலிமையாக இருந்தால், அது ஆயுளை நீட்டிக்குமா?" என்று கேட்டாள்.

"மனதிற்கு உடலின் வலிமையைப் பற்றிய கவலை ஒரு போதும் கிடையாது பெண்ணே. அது நினைத்த நேரத்தில் நிலவில் இறங்கக்கூடியது. ஆயிரம் பேர் எதிரே வந்தாலும் அடித்து நொறுக்கும் வலிமை கொண்டது. அதனால், நீண்டநாள் வாழும் பேராசை மனதுக்கு வேண்டும்.

அதற்கு முதல் படி என்ன தெரியுமா? என்ன வயது என்பதையும், இன்றும் நாளையும் என்ன நாள் என்பதையும் மறந்துவிடு. இனி, ஒவ்வொரு நாளும் உனக்கானது என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்.

முடிந்த வரையிலும் குடும்பம், நட்பு, உறவினர்கள் என்ற வட்டத்தைவிட்டு விலகியே நில். ஏனென்றால், நீ சிலருக்கு கட்டுப்பாடுகள் விதிப்பதும் மற்றவர் உன்னை கட்டுப்படுத்துவதும் மனதை காயப்படுத்தும். புதுப்புது இடங்களை, புதுப்புது மனிதர்களை சந்தித்துக்கொண்டே இரு. நாளைய பற்றிய கவலையை மறந்து இன்றைய தினத்தில் மட்டுமே வாழு. நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் விடாது பற்றிக்கொள். 100 ஆண்டு மட்டுமல்ல, காலம் உள்ள வரையிலும் நீ வாழ்வாய்" என்று ஞானகுரு முடித்ததும் சகுந்தலாவிடம் புன்னகை வந்தது.


www.gyanaguru.com



# அறிவு என்பது எதுவெனில்...

அறிவாளி என்று ஒரு விஞ்ஞானியை ஏற்றுக்கொள்ளும் மக்கள், அவரைவிட பெருவெற்றி பெற்ற சினிமா கலைஞர்களை, தொழிலதிபர்களை அறிவாளியாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால், அறிவு என்று நினைப்பது எல்லாமே, அதிகம் தகவல் தெரிந்து வைத்திருக்கும் புத்தியைத்தான். இதுதான் உண்மையா என்று யாரும் சந்தேகம்கூட கொள்வதில்லை என்பதுதான் ஆச்சர்யம்.

ஞானகுருவை தரிசிக்க வந்த ராமநாதன், ’ என் மகனை ஐ.ஏ.எஸ். ஆக்குவதற்கு ஆசைப்படுகிறேன், ஆனால்... அவனுக்கு பொது அறிவு அறிந்துகொள்ளும் ஆர்வமே இல்லை’ என்று வருத்தப்பட்டான்.

“உன் மகன் அறிவாளியாக ஆசைப்பட்டால், அவனை புத்தகங்களை தொட விடாதே..” என்றார் ஞானகுரு.

அதிர்ந்துபோன ராமநாதன், “என்ன சாமி இப்படி சொல்றீங்க. நிறைய நிறைய படிச்சவங்கதானே அறிவாளியா இருக்காங்க. நிறைய படிச்சாத்தானே ஐ.ஏ.எஸ் ஆகமுடியும்?” என்று கேட்டான்.

“இந்த உலகில் அதிகம் அறிந்து வைத்திருப்பது கம்யூட்டர்தான். ஒரு லட்சம் தகவல்களை கம்யூட்டரிடம் கொடுத்து, அதில் இருந்து எந்த ஒரு கேள்வி கேட்டாலும் பதில் அளிக்கும் திறன் அதற்கு உண்டு. அதனை நீ அறிவாளி என்று ஏற்றுக்கொள்வாயா? ஒரு புத்தகத்தில் எக்கச்சக்க தகவல்கள் இருக்கிறது என்பதற்காக அதனை நீ அறிவாளி என்று ஏற்றுக்கொள்வாயா? எந்த ஆண்டு பானிபட் போர் நடந்தது, நைல் நதியின் நீளம் என்ன, தாஜ்மஹாலை கட்டியது யார் என்பதை எல்லாம் படித்து, பதில் தெரிந்து வைத்திருப்பது அறிவு அல்ல. நமக்கு ஏன் துன்பம் வருகிறது என்பதை அறிவது அறிவு. அதற்கான விடை எங்கே இருக்கிறது என்று தேடுவது அறிவு. பிறரைப் போன்று வாழ்வது முக்கியம் இல்லை, தனக்கான வழியை அறிந்து செல்லவேண்டும் என்பதை அறிவது அறிவு...”


“என்ன சாமி இப்படி சொல்றீங்க... பையன் படிக்க வேண்டாமா?”

“அவனுக்கு எதில் ஆர்வம் இருக்கிறதோ அதனை படிக்கச் சொல். அதில்தான் அவனுடைய அறிவு வளர வேண்டும். ஐ.ஏ.எஸ். தேர்வு படிக்க வேண்டும் என்ற ஆசை அவனுக்குள் இருந்தால், நீ காட்டிய வழியில் எப்போதோ போயிருப்பான். அவன் பாதையில் போகவிடு. அவன் என்ன விரும்புகிறான் என்று கேள். அந்த வழியில் சென்றால்தான், அவன் வெற்றியைத் தொடுவான். உன் வழியில் சென்றால் அவன் வேலையில் சேரலாமே தவிர, வெற்றியாளனாக மாற முடியாது. அதனால், உன் குப்பையை அவனுக்குள் திணிக்காதே” என்று கண்களை மூடினார் ஞானகுரு.





www.gyanaguru.com



# எங்கே கிடைக்கும் நிம்மதி

வாழ்க்கை என்பது ஓர் அற்புதமான வரம். இந்த உடலில் உயிர் இருக்கும் வரையிலும் ஆனந்தமாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்பதுதான் எல்லா மனிதர்களின் விருப்பமாக இருக்கிறது. நிறைய நிறைய பணமும், வசதி வாய்ப்புகளும், அதிகாரமும் புகழும் இருந்தால்தான் ஆனந்தம் கிடைக்கும் என்று நிறைய பேர் நினைக்கிறார்கள். ஆனால், இது உண்மை கிடையாது.

இன்பம், நிம்மதி, சோகம் என்பது எல்லாமே ஒவ்வொருவரின் மனதுக்குள்ளும்தான் ஒளிந்து கிடக்கிறது. மனதுக்குள்தான் ஆனந்தமும் நிம்மதியும் இருக்கிறது என்பதை நம்புவதற்கு கடினமாக இருக்கிறதா..? ஏற்கெனவே நீங்கள் கேள்விப்பட்ட கதையாக இருந்தாலும், பரவாயில்லை, இதனை படியுங்கள்

ஒருவன் ரொம்பவும் சிரமப்பட்டு உழைத்து பணக்காரன் ஆனான். எந்த நேரமும் உழைப்பு, பணம் என்ற நினைப்பிலேயே இருந்ததால், வாழ்க்கையில் நிம்மதி இல்லையே என்ற கவலை வந்துவிட்டது. எப்படி நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வது என்று பலரிடமும் போய் கேட்டான். யாரும் அவனுக்கு சரியான வழியைக் காட்டுவதாக இல்லை. கடைசியாக காட்டுக்குள் இருந்த ஒரு ஞானியைக் கண்டுபிடித்துக் கேள்வி கேட்டான்.

”என்னிடம் செல்வம் இருக்கிறது. சொந்தம் இருக்கிறது. ஆனால் நிம்மதி மட்டும் இல்லை. நான் ஆனந்தமாக வாழ வழி காட்டுங்கள்...” என்று மன்றாடிக் கேட்டான்.

உடனே அவர், “சரி உன்னிடம் இருக்கும் பணம், தங்கம், பத்திரங்கள் எல்லாவற்றையும் மொத்தமாகக் கொண்டுவா... நான் ஒரு நல்ல வழி காட்டுகிறேன்...” என்றார்.

உடனே வீட்டுக்குப் போன பணக்காரனும் ஒரு பெரிய சூட்கேஸில் பணம், நகை, பத்திரங்கள் எல்லாவற்றையும் மொத்தமாக அடைத்து எடுத்து வந்தான். ஞானி ஆசிரமத்துக்குள் இல்லை என்றதும் அவருக்காகக் காத்திருந்தான். அந்த நேரம் திடீரென அங்கே வந்த ஒரு முரடன் அவரிடம் இருந்த சூட்கேஸைப் பறித்துக்கொண்டு வேகமாக ஓடினான். உடனே பணக்காரனும் அவனுக்குப் பின்னே விரட்டிக்கொண்டு ஓடினான். எங்கெங்கோ காட்டுக்குள் ஓடியவன் கடைசியாக மீண்டும் ஆசிரமத்துக்குள் திரும்பி வர, ஞானியும் அவரது சீடர்களும் அந்த முரடனைப் பிடித்துக் கொண்டார்கள். அவனிடம் இருந்த சூட்கேஸைப் பறித்து பணக்காரரிடம் கொடுத்தார்கள்.


”சாமி... இந்தப் பெட்டி கிடைச்சதும்தான் எனக்கு நிம்மதியா இருக்கு... சந்தோஷமா இருக்கு...” என்று பணக்காரர் ஆனந்தப்பட்டார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் வந்தது.

”இத்தனை நாளும் இந்தப் பெட்டியும் இதில் உள்ள பொருட்களும் உன்னிடம்தானே இருந்தன. பிறகு ஏன் ஆனந்தமும் நிம்மதியும் உன்னிடம் இல்லை என்று வருத்தப்பட்டாய்?” என்று கேட்டார் ஞானி. அதன் பிறகுதான் பணக்காரனுக்கு உண்மை புரிந்தது. ஆம், நிம்மதியையும் சந்தோஷத்தையும் வெளியில் தேடுவது வீண் வேலை... மகிழ்ச்சி, நிம்மதி போன்றவை நம் மனதுக்குள்தான் ஒளிந்து கிடக்கிறது. அதனை கண்டுபிடித்துவிட்டால், ஆனந்தம், ஆனந்தமே.

www.gyanaguru.com

# கமான் கடவுளே





இந்த உலகில் அதிகம் நம்பப்படுவதும், அதிக சர்ச்சைக்கு உள்ளாவதும் கடவுள் என்ற வார்த்தைதான். கடவுளை பார்த்துவிட வேண்டும், அவரிடம் இருந்து ஏதேனும் நன்மைகளை பெற்றுவிட வேண்டும் என்றுதான் அத்தனை மனிதர்களும் துடிக்கின்றனர். அதேநேரம், கடவுளை காண்பது அத்தனை எளிதல்ல என்றும் நினைப்பதும்தான் விசித்திரம்.

கடவுளை காண்பதற்கு என்ன தகுதி வேண்டும் என்று ஞானகுருவிடம் கேட்டார் மகேந்திரன். அவர் தோளில் கை போட்டபடி ஞானகுரு பேசத் தொடங்கினார். “நீ வி.ஐ.பி. கட்டணம் செலுத்தி கோயிலுக்குச் சென்று கடவுள் உருவத்தை தரிசனம் செய்துவிடலாம். ஆனால், அந்த சிலையில் கடவுள் தன்மையை உன்னால் கண்டடைய முடியாது. ஓர் உண்மை தெரியுமா? கடவுளைக் காண கோயிலுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. மிக எளிதாக எல்லா மனிதர்களும் கடவுளை நேரில் பார்க்கமுடியும்... தினமும் மனிதர்கள் கண் முன்னே காட்சி தரவே செய்கிறார். ஆனால், அதுதான் கடவுள் என்று மனிதர்கள் உணர்வதுதான் இல்லை” என்றார்.

“சாமி, புரியலையே...” என்று மெல்லிய குரலில் கேள்வி எழுப்பினார்.

‘‘சூரியன் பூமியை தன்னுடைய கரங்களால் தட்டியெழுப்பும் உதயத்தை பார்த்திருக்கிறாயா..? மழை பூமியை ஆவேசமாக முத்தமிடுவதை ஆழ்ந்து கண்டிருக்கிறாயா..? மொட்டுக்குள் இருந்து சோம்பல் முறித்து பூவாக மலரும் காட்சியைக் கண்டு அதிசயத்திருக்கிறாயா..? பிரசவத்தில் வெளியே வந்த உயிரின் அலறலைக் கேட்டு பெற்றோரும் மற்றவர்களும் கண்ணில் நீர் வடிய மகிழ்வதைக் கண்டு நீயும் மகிழ்ந்திருக்கிறாயா..? காதை பிளக்கும் சத்தங்களுக்கு இடையிலும் நிம்மதியாகத் தூங்குபவனை ரசித்திருக்கிறாயா..? உடல் இடையூறுகளைத் தாண்டியும் உழைப்பனின் மன உறுதியை ரசித்திருக் கிறாயா..? கீழே விழும் ஒருவனை தூக்கி நிறுத்துவதற்கு ஓடோடி வரும் ஜனங்களின் முகத்தை தரிசித்திருக் கிறாயா..? வயிறு நிறைந்ததும் ஏப்பம் விடும் பிள்ளையைக் கண்டு சிலிர்க்கும் தாயின் இதயத்தை அறிந்திருக்கிறாயா..? இதுபோன்ற இயல்பான காட்சிகளில்தான் கடவுள் இருக்கிறார். இந்த காட்சிகளைக் காண்பதற்கு யாருக்கும் எந்த தகுதியும் வேண்டியதில்லை. இவற்றில் கடவுள்தன்மை இருக்கிறது என்று நம்பும் மனம்தான் தேவை.

உன் மனசுக்குள் முதலில் கடவுள் தன்மையைக் கொண்டுவா. அதன்பிறகு கடவுளும் வந்து சேர்வார். ஆம், அவருக்குத் தெரியும் எப்போது, எப்படி காட்சி அளிக்க வேண்டும் என்பது. கடவுளை நேரில் தரிசிப்பதைவிட, இந்த தெய்வீகத் தன்மைதான் அதிக சுவையுள்ளது. ருசித்துப் பார்” என்றார் ஞானகுரு.

”தெய்வீகத்தன்மை எங்கே இருக்கிறது என்று விளக்குவதைக் கேட்டு சிலிர்க்கும் தருணத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள்” என்று சிரித்தார் மகேந்திரன்.

**மந்திரச்சொல்**

தோல்வியில் இருந்து எதையும் நீ கற்கவில்லை என்றால், வெற்றி என்பது எட்டாக்கனிதான்.


www.gyanaguru.com

# மரண அழுகை பாசமல்ல



அது ஒரு தனியார் மருத்துவமனை. பரபரப்பான ஒரு காலை நேரம். அறுவை சிகிச்சை செய்வதற்கான ஆலோசனை நடந்த நேரத்திலேயே, உடல் திடீரென துடிக்கத் தொடங்கி உயிரை இழந்துவிட்டான் கணவன். தன் கண் முன்னே ஒருசில நிமிடங்களில் எல்லாம் நடந்து முடிந்துவிட்டதைக் கண்டு கொஞ்சநேரம், மிரட்சியுடன் நின்ற பெண்.. திடீரென பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கினாள். இளம் வயதிலேயே கணவனை இழந்து கதறும் பெண்ணின் குரல், அந்த மருத்துவமனையையே உலுக்கிப் போட்டது. அவள் அழுகையில் உறைந்து நின்ற ராமச்சந்திரனைப் பார்த்து புன்னகைத்தார் ஞானகுரு.

”அந்த பெண் அழுவதன் காரணம் பாசம் என்றா நினைக்கிறாய் ராமச்சந்திரா... அது பாசம் அல்ல பயம்” என்று புன்னகையை அதிகப்படுத்தினார். சட்டென கோபமாகி ஞானகுருவை ஒரு கேவலப் பார்வை பார்த்தான். ”என்ன சொல்றீங்க சாமி... அந்தப் பெண்ணுக்கு கணவன் மீது பாசம் இல்லைன்னா சொல்றீங்க? உங்களுக்கு மனசாட்சியே இல்லையா..?””

”ஆம் ராமச்சந்திரா... கேட்பதற்குக் கசப்பாக இருந்தாலும் உண்மைகளை புரிந்துகொள்ளத்தான் வேண்டும். நெருங்கியவரின் மரணத்தின் போது வெளிவரும் கண்ணீர் இறந்தவருக்கானது அல்ல... நமக்கானது. இனி அவரது உதவியின்றி, இந்த உலகில் எப்படி வாழப் போகிறோம்? அவரால் இதுவரை கிடைத்த சந்தோஷங்களும், வசதிகளும், தொந்தரவுகளும் இனி கிடைக்காமல் போய்விடுமே என்ற ஆதங்கம். இறந்தவர் துணையில்லாமல், இனி வலிமையுடன் செயல்பட முடியாதே என்ற பயம்.

கணவன் இறந்தபின் கதறி அழுகிற மனைவி, தன் தாலி பறிபோனதுக்கு மட்டுமே அழுவது இல்லை. விவரம் அறியாத வயதில் நிற்கும் இந்தக் குழந்தைகளை இனி எப்படி கடைதேற்றுவேன் என்ற அச்சம்தான் பெரும் அழுகையாக வெடிக்கும். மனைவி இறந்ததும் ஆண் அப்படியெல்லாம் அழுவதில்லை, ஏனென்றால் அவனுக்கு பொருளாதார பயம் இல்லை. மேலும், இன்னொரு பெண்ணை திருமணம் செய்துகொள்ளலாம் என்ற நம்பிக்கை இருக்கும்...” என்றேன்.

”சும்மா எதையாவது சொல்லி பயமுறுத்தாதீங்க சாமி...” என்றான்.

”உண்மை ராமச்சந்திரா. என்னைப் பொறுத்தவரை பெண்தான் மிகப்பெரிய சுயநலவாதி. ஆனால் தன்னைப் பற்றி நினைப்பதில் அல்ல... தன்னையும் தாண்டி தன் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில் அவள் மிகப்பெரிய சுயநலவாதி. உலகின் மற்ற எல்லா உறவுகளுக்கும் இரண்டாம் இடம் கொடுத்து விட்டு, குழந்தைகளுக்காக எதையும் செய்யத் தயாராகிற சுயநலவாதி. அதனால்தான் உலகம் முழுவதும் குடும்பங்கள் நெருக்கமும் சகிப்புத்தன்மையும் இல்லாமல் தவிக்கும்போதும்... நம் தேசத்தில் உறவுகளுக்கான மகிமை மாறாமல் இருக்கிறது...” என்றார்.

”நம்ப முடியலை சாமி...” என்று தடுமாறினான்.

**”இன்று பேப்பரில் ஏதாவது மரணச் செய்தி படித்தாயா?”**

”இன்றைக்கு என்ன... தினமும்தான் பார்க்கிறேன். துக்கச் செய்தி... வயிற்றெரிச்சல் செய்தியைத் தவிர வேறு என்ன பேப்பரில் வருது?”

**’’சரி... பேப்பரில் பார்த்த எத்தனை மரணங்களுக்கு நீ அழுதிருக்கிறாய்..?”**

அமைதியாக இருந்தான் ராமச்சந்திரன்.

”எந்த மரணத்திற்கும் அழுதிருக்க மாட்டாய், ஏனென்றால் அவர்களால் உனக்கு ஆவப்போவது எதுவும் இல்லை. உன் பக்கத்து வீட்டுக்காரன், பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியர் செத்துப் போனால் வருத்தப்படுவாய், ஆனால் கதறி அழ மாட்டாய். ஏனென்றால் அவர்கள் இனி உனக்கு எந்த உதவியும் செய்யப் போவது இல்லை. ஆனால் உன் அம்மா இறந்தால் தாங்க முடியாமல் கதறியழுவாய். ஏனென்றால் அப்புறம் உனக்கு யார் சமைத்துப் போடுவது? என்ற கவலையில் அழுவாய்... இனி மரணங்கள் பற்றிக் கேள்விப்படுகையில் உன் உள்மனது என்ன சொல்கிறது என்று கேட்டுப்பார்...”

கொஞ்சநேரம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்த ராமச்சந்திரன், “சாமி... மரணத்தைப் பத்தி ஆழமா ஆராய வேண்டாமே... நாம இவ்வளவுதானான்னு கேவலமா இருக்கு... மனசு கலவரமா இருக்குது”

”ராமச்சந்திரா... நீ பயப்படுவதால் மரணம் வராமல் போய்விடுமா? நிழல் போன்று நம்முடன் இணைந்தே இருக்கிறது மரணம். அதனை சிநேகத்துடன் பார்க்கக் கற்றுக் கொள். குழந்தைகள் கடற்கரையில் மணல் வீடு கட்டி, கற்களால் அலங்காரம் செய்து சந்தோஷமாக விளையாடுவார்கள். தாயின் அழைப்புக்குரல் கேட்டதும், அப்படியே மணல் வீட்டை மறந்துவிட்டு தாயுடன் சென்று விடுவார்கள். அதுபோன்று மரணம் அழைக்கும் போது, இந்த உடலை விட்டுச் செல்லும் மனநிலையுடன் எப்போதும் தயாராக இரு. இந்த உலகில் நீ சேமித்தது எதுவும் உன்னுடையது இல்லை என்ற எண்ணம் இருந்தால் மரணம் பற்றிய பயம் வராது” என்றார்.

இன்னமும் மிரட்சியில் இருந்தான் ராமச்சந்திரன்.

www.gyanaguru.com
www.gyanaguru.com

**அத்தியாயம்-4**

**பொக்கிஷ நேரம்...!**

# ஆழ்மனமே தாழ் திறவாய்!



அனைத்து உயிர்களிலும் நானே நிரம்பியிருக்கிறேன் என்று பகவத் கீதையில் சொல்கிறார் கண்ணபிரான். வேதங்களில் சாம வேதம், தேவர்களில் இந்திரன், மரங்களில் அரச மரம், மாதங்களில் நான் மார்கழி என்று சொன்னதை எத்தனையோ பேர் படித்திருக்கிறார்கள், கேட்டிருக்கிறார்கள். ஆனால், அதனை சரியான சந்தர்ப்பத்தில், ஒரு சினிமா பாடலாக மாற்றி நல்ல பேர் வாங்கியவர் கவிஞர் கண்ணதாசன்.

பாவ மன்னிப்பு படத்தில் இடம்பெற்ற, ‘காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலே அவள் ஓவியம், மாதங்களில் அவள் மார்கழி, மலர்களிலே அவள் மல்லிகை’ என்ற பாடல் கீதையின் சாரம்சம் சார்ந்து எழுதப்பட்டது. பாடல் எழுதும் நேரங்களில் எல்லாம் கண்ணதாசன், பரபரப்பான சூழலில் இருந்து விலகி, கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்து யோசிப்பார் என்பது அனைவருக்கும் தெரிந்த தகவல். இதுதான் அவரது ஆழ்மன வெளிப்பாடு. எங்கேயோ, எப்போதே கேட்டு, அறிந்த தகவல்களை தேவைப்படும் நேரத்தில் மிகச்சரியாக பயன்படுத்த உதவி செய்வதுதான் ஆழ்மனம்.


வீட்டுக்கு ஒரு வெள்ளி டம்ளர் பரிசாக வந்திருக்கும். அதனை வேறு ஒரு திருமணத்திற்கு அன்பளிப்பாக கொடுக்கவேண்டும் என முடிவெடுத்து பத்திரமாக வைப்பார்கள். ஒரு சில மாதங்களில் அப்படியொரு வெள்ளி டம்ளர் பரிசாக வந்ததை மறந்து விடுவார்கள். மிக நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணம் வரும் போது, தேவையில்லாமல் கைக்காசை செலவு செய்து வெள்ளி டம்ளர் வாங்கி பரிசு கொடுப்பார்கள். பின்னர் வேறு ஏதேனும் பொருள் தேடும்போது, மிகவும் பத்திரப்படுத்தி வைத்த வெள்ளி டம்ளர் தலையைக் காட்டும். இதைக் கொடுக்க மறந்துவிட்டோமே என வருத்தப்படுவார்கள். இது பொதுவாக அனைத்து வீடுகளிலும்



www.gyanaguru.com

இதற்கு ஏற்றால்போல், ஆழ் மனம் பற்றி ஆசிரியர் அல்லது பெற்றோர் எதுவும் சொல்லித்தருவதில்லை. இது ஏனென்றால், அவர்களுக்கும் ஆழ்மனம் பற்றி எதுவும் தெரியாது. எனவே, ஆழ்மனம் என்பதை அந்நியமாக அல்லது அபாயமாக நினைக்கிறார்கள். இது உண்மை என்பதுபோல் அவ்வப்போது சில செய்திகள் வெளிவருவதுண்டு.

# ஆழ்மனமே தாழ் திறவாய்!



### மூளைக்கு சோறு போட்டாச்சா....

மூளை ஆற்றலுடன் செயல்படுவதற்கு ஆக்சிஜன் தேவைப்படுகிறது. நாம் தினமும் சுவாசிக்கும்போது ஆக்சிஜன் உடலுக்குள் செல்கிறது என்றாலும், தேவையான அளவுக்கு கிடைப்பதில்லை. மேலோட்டமாக மூச்சு இழுப்பதால், மிகக்குறைந்த அளவு ஆக்சிஜன் மட்டுமே உடலுக்குள் செல்கிறது. நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில் சுமார் 20% மூளைக்கு மட்டுமே பயன்படு கிறது. அதனால் நன்கு ஆழமாக மூச்சை இழுப்பதன் மூலம் நிறைய காற்றை சுவாசித்து கூடுதல் ஆக்சிஜன் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக பிரத்யேக பயிற்சி தேவையில்லை. ஒவ்வொரு நொடியும் மூச்சு விடும் போதும், இழுக்கும் போதும் கூடுதல் கவனம் செலுத்தி அதிக ஆக்சிஜன் எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால் மூளை சுறுசுறுப்படையும். மூளையின் சுறுசுறுப்பு காரணமாக ஆழ்மனம் கூடுதல் வலிமையுடன் திகழும்.

நடைபெறும் சம்பவம்தான்.

**இந்த சம்பவத்திற்கும் மனதிற்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா?**

இருக்கிறது. ஆழ்மனம் விழிப்புணர்வுடன் இருக்கும் பட்சத்தில், ஒரு திருமண பத்திரிகையைப் பார்த்ததும், வீட்டில் பாதுகாத்து வைத்திருக்கும் வெள்ளி டம்ளர் நினைவுக்கு வந்துவிடும்..

இதற்குப் பெயர் ஞாபகசக்தி என்று நீங்கள் சொல்லலாம். சரியான நேரத்தில் ஞாபகப்படுத்தும் திறன் கொடுப்பந்தான் ஆழ் மனம். பல்வேறு நன்மைகள் கிடைக்கிறது என்றாலும், ஏன் ஆழ்மனதை வசப்படுத்த அனைவரும் முன்வருவதில்லை?

- ஆழ்மனம் பற்றி அறியாமை.
- ஆழ்மனதை புரியாத புதிராக பார்த்தல்.
- ஆழ்மனதைப் பழக்கப்படுத்த முடியாது என நினைத்தல்.
- ஆழ்மனம் ஆபத்து என நம்புதல்.

இதற்கு ஏற்றால்போல், ஆழ் மனம் பற்றி ஆசிரியர் அல்லது பெற்றோர் எதுவும் சொல்லித்தருவதில்லை. இது ஏனென்றால், அவர்களுக்கும் ஆழ்மனம் பற்றி எதுவும் தெரியாது. எனவே, ஆழ்மனம் என்பதை அந்நியமாக அல்லது அபாயமாக நினைக்கிறார்கள். இது உண்மை என்பதுபோல் அவ்வப்போது சில செய்திகள் வெளிவருவதுண்டு.

## தீவிரவாதிகள் ஜாக்கிரதை

பல்வேறு நாச வேலைகளுக்குக் காரணமாகவர்களை பிடிக்கும்போது, அவர்களில் டீன் ஏஜ் வயதினரும் இருப்பதுண்டு. அவர்கள் மனதை வசப்படுத்துவது, ஏமாற்றுவது எளிது. எனவே, மனசாட்சி இல்லாமல் கொலை, கொள்ளை செய்வதற்கு, அவர்களுடைய ஆழ் மனதில் விஷ விதைகள் விதைக்கப்படுகிறது. மதம், சாதி, மொழி, இனம் என்ற பெயரில் ஆழ் மனதில் வெறுப்பு விதைக்கப்படுவதாலே, பலரால் குற்றவுணர்ச்சி இன்றி அநியாயங்களையும், அராஜகங்களை நிகழ்த்த முடிகிறது. இவர்கள் தற்கொலைப் படையாக மாறி கொடூர தாக்குதல் நடத்துவதற்கும் தயங்குவதில்லை.. இதுபோன்று தீய விஷயங்களுக்கும் ஆழ் மனம் அதிகம் பயன்படுத்தப்படுவது உண்மைதான்.

நெருப்பு, கத்தி போன்றவை ஆபத்தானவை என்றாலும், அவற்றை முறையாகப் படுத்தினால் அற்புத பாதுகாப்பு சாதனமாகத் திகழும். அதுபோல், ஆழ்மனம் என்பதும் அற்புதங்கள் செய்யக்கூடிய மாய விளக்கு. அதனை ஆக்கத்திற்கும், அழிவுக்கும் பயன்படுத்திக்கொள்வது, அவரவர் கையில்தான் இருக்கிறது.

முதன்முதலில் இரு சக்கர வாகனம் ஓட்ட கற்றுக்கொள்ளும் நேரத்தில் மிகுந்த எச்சரிக்கை உணர்வு தேவைப்படும். வண்டி பேலன்ஸ் சரியாக இருக்கிறதா, முன்பும் பின்பும் வாகனங்கள் வருகிறதா, எந்த வேகத்தில் பிரேக் பிடிக்க வேண்டும், இன்டிகேட்டர் போடவேண்டுமா என்றெல்லாம் ஏகப்பட்ட சந்தேகம் முளைத்துக்கொண்டே இருக்கும். ஆனால் இவை எல்லாமே அதிகபட்சம் ஒருசில மாதங்களே நீடிக்கும்.


ஓட்டுவதற்கு நன்றாக பழகியபின், வீட்டில் இருந்து அலுவலகம் சேரும் வரை… பயணத்தில் பிரச்னையே இருக்காது. சிக்னல்களைப் பார்த்து நிற்பது, டிராஃபிக்கில் நுழைந்து செல்வது, வழி கேட்பது, வழி விடுவது, பள்ளங்களை சமாளிப்பது போன்ற எல்லா செயல்களும் அனிச்சையாகவே நடக்கும். இதுமட்டுமின்றி பில்லியனில் அமர்ந்திருக்கும் நண்பரிடம் ஜாலியாக சிரித்துப் பேசிக்கொண்டே வண்டி ஓட்டவும் முடியும். இதற்குக் காரணம் தெரியுமா?

வண்டி ஓட்டுவதற்கு நன்றாக பழகியதாகச் சொல்லலாம். உண்மை அதுவல்ல, வண்டி எப்படி ஓட்டவேண்டும் என்பதை ஆழ்மனம் தெளிவாகக் கற்றுக் கொண்டது. அறிந்துகொண்ட தகவல்களைக்கொண்டு, எந்த சிக்கலும் இல்லாமல் வண்டி ஓட்டுவதற்கு அனிச்சையாக உதவி செய்கிறது. மூச்சு விடுவதற்கும், இதயம் துடிப்பதற்கும் அனிச்சையாக மனம் உதவுவது போன்று, வண்டி ஓட்டுவதற்கும் உதவி செய்கிறது. இதுதான் ஆழ்மனதின் சக்தி. இந்த சக்தியை முழுமையாகப் பயன்படுத்துவதில்தான் ஒருவரது வெற்றி, தோல்வி அடங்கியிருக்கிறது. அதாவது வெளி மனம் இயங்கிக்கொண்டு இருக்கும்போதே, ஆழ் மனமும் இயங்கும்படி செய்ய வேண்டும்.

## அந்த இரண்டு சிந்தனைகள்

மேல் மனம் நல்ல விஷயங்களை கிரகிக்கும்போது, அவற்றை ஆழ்மனம் அப்படியே ஏற்றுக் கொள்கிறது. அதேபோன்று கெட்ட விஷயங்களை அதிகம் பார்க்கும்போது, ஆழ்மனதும் அதை சந்தோஷமாக எடுத்துக்கொள்கிறது. உதாரணமாக படிப்பதற்கு நீண்ட நேரம் செலவிடுபவன் அறிவாளியாக மாறுகிறான். பள்ளிக்குப் போகாமல் கும்பல் சேர்ந்து பீடி குடிக்கும் சிறுவர்கள்… போக்கிரிகளாக, ரவுடிகளாக வளர்கிறார்கள்.

அதனால் மேல் மனம் எப்போதும் நல்லதை நினைக்க வேண்டும், நல்லதையே பார்க்க வேண்டும். தோல்வி, அச்சம், கவலை, எரிச்சல், அவநம்பிக்கை, தாழ்வு மனப்பான்மை, மரணம் போன்ற விஷயங்களில் அதிக கவனம் செலுத்திவந்தால், அதுவே அவரது ஆழ்மனதில்



பதிவாகி வாழ்விலும் எதிரொலிக்கும். அதேநேரம் வெற்றி, தைரியம், ஆனந்தம், உற்சாகம், நகைச்சுவை, நம்பிக்கை போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தினால் மனமும் வலிமை ஆகிவிடும்.

எனவே எப்போதும் நல்ல எண்ணங்களை வரவேற்க வேண்டும், தீய எண்ணங்களை விலக்கி வைக்க வேண்டும். இதற்கு முழு நேர உழைப்பும் விழிப்பும் தேவை. ஏனென்றால் ஆழ்மனம் கடுமையான உழைப்பாளி மட்டுமல்ல, மோசமான முதலாளியும்கூட என்பதால் வலது மூளையை தூண்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

## வலது மூளையை தூண்டுதல்

ஐம்புலன்களின் எண்ணத் தொகுப்புதான் நிகழ்கால மனம் என்று பார்த்தோம். அதாவது கண்களால் பார்த்துக்கொண்டும், பேசிக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருந்தால் இடது பக்க மூளை மட்டுமே செயல்படும். வலது பக்க மூளையை செயல்பட வைப்பதற்கு, ஐம்புலன்களையும் செயல் இழக்கச் செய்ய வேண்டும். ஐம்புலன்களும் அமைதி அடைந்த பிறகே, வலது மூளை தனது செயலைத் தொடங்கி ஆழ் மனதை இயங்க வைக்கும்.

பொதுவாக கண் விழித்தது முதல் படுக்கைக்குச் செல்லும் வரையிலும் வெளி மனம் கடுமையாக உழைக்கிறது. படுக்கையில் படுத்ததும் வெளி மனம் ஓய்வு எடுக்கும் வகையில், ஐந்து புலன்களும் அமைதி கொள்கின்றன. அந்த நேரத்தில், ஆழ் மனம் விழிக்கிறது. ஆழ் மனம் விழித்திருக்கும் நேரமே, மனிதனுக்குக் கிடைக்கும் பொக்கிஷ நேரம். மனதில் நினைக்கும் அத்தனையும் அடைய முடியும். இந்த நேரத்தில் ஆழ் மனதில் நல்ல எண்ணங்களை விதைக்கவும், நம்பிக்கைகளை புகுத்தவும் வேண்டும்.

## இப்போது ஒரு கேள்வி....

உங்கள் தெருவில் மிகப்பெரிய ரவுடி ஒருவன் எல்லோருக்கும் தொந்தரவு கொடுத்து வருகிறான். அவன் குடி போதையில், ஒரு விபத்தில் சிக்கி மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் இருப்பது தெரியவருகிறது.

அப்போது உங்கள் சிந்தனை என்னவாக இருக்கும்?

**- மனக்கண் திறக்கட்டும்.**

www.gyanaguru.com



# போர் எனும் பெருந்துயரம்..!

மனிதன் நாகரிகம் அடைந்துவிட்டான் என்பது எத்தனை பெரிய பொய் என்பதை அவ்வப்போது நிரூபிக்கின்றன போர்கள். இந்த உலகில் ஒவ்வொரு நிமிடமும் ஏதேனும் ஒரு மூலையில் துப்பாக்கி சத்தம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. மனிதனை மனிதன் சுட்டுக்கொன்று, அதற்கு தங்கப்பதக்கம் வாங்கி பெருமைப்படும் கொடுமையும் நடக்கிறது.

சிங்கம் கொடுமையான விலங்குதான். அதற்கு பசி எடுக்கும்போது எதிரே நிற்பது யானையா, ஒட்டகமா, மானா என்றெல்லாம் பார்ப்பதில்லை. அடித்து வீழ்த்தி உண்ணத் தொடங்கும். பசி இல்லாத நேரம், படுத்துக்கிடக்கும் சிங்கத்தின் அருகே எந்த விலங்கு சென்றாலும், அது லட்சியம் செய்வதில்லை. இதனை கொடுமையான விலங்கு என்று சொல்லும் மனிதன், தன்னை நாகரிகம் அடைந்தவன் என்று சொல்லிக்கொள்கிறான்.

அதாவது, ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக இருக்கிறார்களாம். பிறருடைய சுதந்திரத்திற்கு யாரேனும் இடையூறு செய்தால் தண்டனை நிச்சயம் என்கிறார்கள். அதே மனிதர்கள்தான், ஏதேனும் ஒரு நாட்டுடன் போர் செய்து, தரை மட்டமாக்குகிறார்கள். அன்று எகிப்தில் நடந்ததுதான் இன்று உக்ரைனிலும் நடக்கிறது. சொல்லப்படும் காரணங்கள்தான் வேறு வேறு.

போர் நாடுகளுக்கு இடையில் நடப்பதாக சொல்லப்படுகிறது என்றாலும், இது மனிதனை மனிதன் கொல்வதற்காகத்தான் நடத்தப்படுகிறது. போரும் மரணமும் எப்படிப்பட்டது என்பதை உணர்த்தும் ஒரு கடிதம் இது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோது, ஈராக்குக்கு அனுப்பப்பட்ட அமெரிக்கப் போர் வீரன், போர் முடிவுக்குப் பின் எழுதிய இந்த கடிதம் மிகவும் முக்கியமானது.

இதுதான் அந்த கடிதம்.

’ஒரு எதிர்பாராத திருப்பத்தில் அந்த ஈராக்கிய வீரன் என் முன்னே நின்றிருந்தான். முன்பின் பார்த்திராத அவனது கைகளிலும் துப்பாக்கி இருந்தது. எனது உயிர் அவன் விரல்களிலும், அவன் உயிர் என் விரல்களிலும் இருந்தது.

அவன் சுண்டுவதற்கு சில வினாடிகளுக்கு முன் நான் சுட்டிருக்க வேண்டும். வீழ்ந்து அடங்கினான். கொஞ்சம் தாமதித்து இருந்தால் நான் அவன் போல் அங்கு வீழ்ந்து கிடந்திருப்பேன்.

அருகில் போய் ஆராய்ந்தேன். அவனது பாக்கெட்டில் ஒரு கசங்கிய கடிதமும், ஒரு பெண்ணின் படமும், ஒரு குழந்தையின் படமும் இருந்தன. கடல் கடந்து எங்கோ உலகின் மூலையில் இருந்து என் குழந்தையின் குரல் ஏக்கத்துடன் கேட்டது. அழுகையை எனக்கு அடக்க முடியவில்லை. அது ஈராக்கிற்கும் கேட்டிருக்காது. அமெரிக்காவுக்கும் கேட்டிருக்காது.’

மனிதனை மனிதன் கொல்லும் போர் தேவைதானா மனிதர்களே…



# விரதம் இருந்தால் குழந்தை பிறக்குமா?

இளம் தம்பதியர் கனத்த இதயத்தோடு ஞானகுருவை சந்தித்தனர். ‘‘எனக்கும் இவருக்கும் கடவுள் நம்பிக்கை அதிகம். தினமும் பூஜை செய்கிறேன். வாரம் இரண்டு நாட்களாவது விரதம் இருக்கிறேன். திருமணமாகி 5 வருடங்கள் ஆனபிறகும், கடவுள் கண் திறந்து பார்த்து ஒரு குழந்தை வரம் தரவில்லை” என்று வருந்தினாள்.

“உனக்கு குழந்தை வரம் தரக்கூடிய ஒருவர் வந்தால் அவருக்கு விருந்து வைப்பாயா அல்லது பட்டினி போடுவாயா..?””

“இதென்ன கேள்வி சாமி. வரம் தரக்கூடியவர் மட்டுமல்ல, யாரையும் எப்போதும் பட்டினியில் தவிக்க விடக்கூடாது என்றுதான் சொல்வேன். பட்டினியில் இருக்கும் ஒருவர் எப்படி நல்ல வரம் தரமுடியும்?”

‘‘உனக்கு குழந்தை வரம் தரக்கூடியது உன் உடல்தான் பெண்ணே. அதனை நீ பட்டினி போட்டால் எப்படி குழந்தை வரம் கொடுக்கும்? உடலில் கோடானு கோடி செல்கள் உயிர் வாழ்கின்றன. அவற்றை வாழவைக்க வேண்டிய கடமை உனக்கு இருக்கிறது…”

‘‘ஆனால், பட்டினி இருப்பதும் உடலுக்கு நன்மை செய்வதுதானே..?”

“யாரேனும் ஒரு சிலருக்கு பட்டினி கிடப்பதால் நன்மை கிடைக்கலாம் அல்லது கிடைக்காமல் போகலாம். ஆனால், நீ குழந்தையை வரவேற்பதற்கு உன் உடலை சத்துணவுகளோடு தயார் செய். கடவுள் சிந்தனையை ஒதுக்கி, உன் பாலியல் உறவுகளுக்கான வாசலை திறந்து வை. ஒரு புதிய உயிரை இந்த பூமிக்கு வரவழைக்கும் அற்புதமான முயற்சியில் இருவரும் சந்தோஷமாக இறங்குங்கள். இதனை கடவுளோ அல்லது மருத்துவரோ தந்துவிட முடியாது…”

‘‘திடீரென விரதம் இருப்பதை கைவிட்டால் சாமிக்கு கோபம் வந்துவிடாதா..?”

‘‘நீ பட்டினியாக இருப்பதைக் கண்டு கடவுள் சந்தோஷப்படுவார் என்று யார் சொன்னது? உடலில் சேர்ந்துவிட்ட அதிக கொழுப்பைக் குறைக்கத்தான் பட்டினி உதவும். ஆனால், பட்டினி இருக்கும்போது உனக்கு இனம்புரியாத கோபமும், சோகமும், தளர்வும் உண்டாகும். அது, கடவுளையும் அருகே நெருங்க விடாது. விரதம் வேண்டாம் பெண்ணே… குழந்தை மீது ஆசை வளர்த்துக்கொள்.. உடலில் ஏதேனும் பிரச்னை இருக்கிறதா என்பதை மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்துகொள்.

தினமும் படுக்கையறையில் காமத்தை வெல்லுங்கள். காதலும் காமமும் கடவுளுக்குப் பிடித்தமானவை. எந்த இன்பத்தையும் கடவுள் தடுப்பதில்லை. உடலால் கடவளைத் தேடு. நீ ஆசைப்பட்டதை கண்டுபிடிக்க முடியும்” என்று முடித்தார்.

கணவனின் கையை அழுத்தமாக பிடித்துக்கொண்டு நகர்ந்தாள் நங்கை.



www.gyanaguru.com

# கதையை கண்டுபிடி!

இந்த உலகில் உள்ள அனைவருக்கும் கதை கேட்பதற்குப் பிடிக்கும். கதை சொல்வதற்கும் பிடிக்கும். கதை இல்லாத மனிதர்களே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒரு லட்ச ரூபாயில் கிடைக்காத சந்தோஷத்தை ஒரு சின்ன கதை கொடுத்து விடும். அதனால்தான் இந்த உலகில் ஜோசியருக்கும் சாமியாருக்கும் ஏகப்பட்ட மரியாதை.

ஜோசியன் மிகப்பிரமாத மாக, உனக்குப் பிடித்தமாதிரி கதை சொல்லுவான். இன்னும் மூன்றே மாதங்களில் உன்னுடைய நிலைமை தலைகீழாக மாறிவிடும். உன்னுடைய வீட்டில் செல்வம் நிறையும், உனக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும் என்று என்னென்னவோ கதை சொல்வான். அடுத்த மூன்று மாதங்களில் ஜோசியன் சொன்னது பலிக்காவிட்டாலும் நீ சந்தோஷமாக இருப்பாய். எல்லா துன்பங்களும் விரைவில் விலகிவிடும் என்றபடி கதையுலகில் காத்திருப்பாய். துன்பங்கள் விலகுவதற்கு பரிகாரம் செய்யவேண்டும் என்றாலும் சந்தோஷமாக செய்துமுடிப்பாய்.



www.aiyaraguru.com
www.aiyaraguru.com

அதேபோன்று சாமியாரும் உனக்கு நிறையவே கதை சொல்வான். முற்பிறவியில் நீ செய்த பாவத்தால் இப்போது துன்பப்படுகிறாய் என்பான். முக்தியும் மோட்சமும் கிடைப்பதற்கு வழி காட்டுகிறேன் என்பான். அவனுடைய உண்டியலில் காசு போடுபவர்கள் நேரடியாக சொர்க்கத்திற்கு செல்லமுடியும் என்று நைச்சியமாகப் பேசுவான். அவன் சொல்வது எல்லாம் கதை என்றுகூட தெரியாமல் கேட்டு ரசிப்பாய்.

தப்பு செய்தால் சாமி தண்டிக்கும் என்பது தொடங்கி, சாதி, மதம், மொழி, பந்தம் எல்லாமே கதை மட்டுமே. கதை கேட்பதற்கு மனிதன் ஆசைப்படுவதால், எல்லாவகையான கதைகளையும் ஏற்றுக்கொள்கிறான். கதை என்று தெரியாமல் கதைக்குள்ளேயே வாழ்கிறான்.

ஒரு ரயில் பயணத்தில் நடந்த சம்பவம் இது. முன்பதிவு செய்யப்பட்ட அந்த ரயில் பெட்டியில் புத்தகம் படிப்பது, சாப்பிடுவது, செல்போன் இணையத்தில் மூழ்குவது, பாட்டு கேட்பது, வெளி அழகை வேடிக்கை பார்ப்பது என அனைவரும் அவரவர் வேலையில் இருந்தார்கள். ஒரு சிறிய ஊரில் சில நிமிடங்கள் நின்றுவிட்டு கிளம்பியது ரயில். அப்போது ஒரு நடுத்தர வயது மனிதரும், எட்டு வயது சிறுவனும் அந்த பெட்டியில் ஏறினார்கள்.

ரயிலில் ஏறிய நொடியில் அந்தப் பையன் முகத்தில் ஏகப்பட்ட பிரகாசம். நிதானமாக அந்த ரயில் பெட்டியின் ஆரம்பம் முதல் இறுதி வரை சுற்றிப்பார்த்தான் சிறுவன். அவனுக்கு சந்தோஷம் அதிகரித்தது. அந்தப் பெட்டிக்குள் ஓடி விளையாடத் தொடங்கினான். சத்தம் போட்டு கத்தினான், குதித்தான், கும்மாளம் போட்டான். தரையில் விழுந்து புரண்டான். ஒவ்வொரு நபரையும் தொட்டுப்பிடித்து விளையாடினான். அவன் குறுக்கேநெடுக்கே ஓடிப்போனதில், ஒருவர் சாப்பிட்ட உணவு கீழே விழுந்தது. தூக்கத்தில் இருந்த சிலர் முறைத்துப் பார்த்தார்கள். ஆனால் அந்த சிறுவன் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. அவன் இஷ்டத்துக்கு சுற்றிக்கொண்டு இருந்தான்.

அந்தப் பெட்டியில் இருந்த அத்தனை பேரும், தங்கள் சுதந்திரமும் சந்தோஷமும் பறிப்போனதாக உணர்ந்தார்கள். சிறுவனை தடுக்கவேண்டிய மனிதனோ, ஜன்னலுக்கு வெளியே எதையோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். கொஞ்சநேரத்தில் சிறுவனின் சேட்டை குறைந்துவிடும் என்று நினைத்தார்கள், ஆனால் அவன் விளையாட்டு அதிகரிக்கத்தான் செய்தது. படித்துக்கொண்டிருந்த ஒருவரின் புத்தகத்தை தட்டிவிட்டு சிரித்தான். ஒரு குழந்தை கையில் இருந்த பிஸ்கெட்டை பிடுங்கி சாப்பிட்டான். ரயில் பெட்டியில் இருந்த அத்தனை பேருக்கும் சிறுவன் மீது வன்மம் வளர்ந்தது.

ஒருவர் மட்டும் கோபத்தை அடக்கமுடியாமல்

www.gyanaguru.com



# கதையை கண்டுபிடி!



அந்த மனிதனிடம் வந்து உரத்த குரலில் கத்தினார். உங்கள் பையனால் எங்கள் அனைவருக்கும் இடைஞ்சலாக இருக்கிறது, அவனை இருக்கையில் இருக்கச்செய்யவில்லை என்றால் போலீஸை அழைப்பேன் என்று அதட்டலாகப் பேசினார். ஜன்னலில் இருந்து பார்வையை எடுத்த மனிதன், உடனே பதட்டப்பட்டான். சிறுவனுக்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று அனைவரிடமும் கைகூப்பி மன்னிப்பு கேட்டபடி பேசத் தொடங்கினான்.

இவன் என்னுடைய சகோதரியின் மகன். போன வாரம் ஒரு விபத்தில் இந்தப் பையனின் அம்மாவும் அப்பாவும் இறந்துவிட்டார்கள். அவனை நான் என்னுடைய வீட்டுக்கு அழைத்துச்செல்கிறேன். முதன்முறையாக இவன் ரயிலில் பயணம் செய்கிறான், அதனால் அதிகம் உணர்ச்சிவசப்பட்டு விட்டான். நான் என் சகோதரி குறித்த கவலையில் இருந்ததால், இவனை கவனிக்கவில்லை. இனி, இவனை அடக்கிவைக்கிறேன் என்று மீண்டும் ஒரு முறை அனைவரிடமும் மன்னிப்பு கேட்டான்.

அடுத்த நொடி அந்த ரயில் பெட்டியின் சூழல் முற்றிலும் மாறிப்போனது. கோபத்துடன் பேசிய மனிதர் உடனே அந்த சிறுவனை கைகளில் அள்ளிக்கொண்டார். நீ நன்றாக விளையாடு, இது உன்னுடைய ரயில் என்று சொன்னார். தன்னுடைய ஹேன்ட்பேக்கில் இருந்து ஒரு சாக்லேட்டை எடுத்து அந்த சிறுவனிடம் கொடுத்தாள் ஒரு பெண். மீண்டும் சிறுவன் விளையாடத் தொடங்கினான். ஜன்னல் வழியே மீண்டும் வேடிக்கை பார்க்கத் தொடங்கிய மனிதன், தனக்குள் சிரித்துக்கொண்டான். ஏனென்றால் அவன் சொன்னது ஒரு கதை.

## மந்திரச்சொல்

உன்னைவிட்டு ஒன்று விலகியதை
மீண்டும் பெற ஆசைப்பட்டால்,
தகுதியை வளர்த்துக்கொள்.

> எத்தனை நாடுகள் கிரிக்கெட் விளையாண்டாலும், இந்தியாவும் பாகிஸ்தான் மோதினால் மிகவும் ஆர்வத்துடன் பார்ப்பாய். போட்டி நடப்பதற்கு முன்பு, யார் ஜெயிப்பார்கள் என்று பார்க்கும் நபர்களிடம் எல்லாம் வாக்குவாதம் செய்வாய்.



# கதையை கண்டுபிடி!

### அப்படியென்றால் கதை மோசமானதா?

கதை நல்லதும் இல்லை, கெட்டதும் இல்லை. ஆனால் இன்று கதை சொல்வது வியாபாரமாகிவிட்டது. நீ உயரமாக வளரவேண்டும் என்றால் குறிப்பிட்ட பானத்தைக் குடிக்கவேண்டும் என்று சொல்கிறான். நீ அழகாக வேண்டும் என்றால் குறிப்பிட்ட க்ரீம் தடவு என்கிறான். அவன் சொல்வது பொய் என்பதுகூட புரியாமல், விளம்பரங்களில் சொல்வதை எல்லாம் வாங்கி பயன்படுத்துவது முட்டாள்தனமல்லவா? ஒரு பானம் உயரத்தை அதிகப்படுத்தும் என்றால், ஜப்பானில் அனைவரும் உயரமாகத்தான் இருப்பார்கள். ஒரு க்ரீம் வெள்ளையாக்கும் என்றால் ஆப்பிரிக்காவில் கருப்பர்களே இருக்க மாட்டார்கள். அதனால் எது கதை, எது உண்மை என்று புரிந்துகொள்ளும் ஆற்றல் மனிதனுக்கு இருக்கவேண்டும். ஆனால் கதை என்பதை நீ புரிந்து கொள்ளக் கூடாது என்பதுதான் அரசியல்வாதிகள், வியாபாரிகளின் ஆசை.

### இதில் எங்கே அரசியல் வருகிறது?

எனக்கு ஓட்டு போட்டால் பாலாறும் தேனாறும் ஓடும் என்று சொல்கிறான். எல்லோருக்கும் நீதி, நியாயம் கிடைக்கும், நாடு அமைதியாக இருக்கும் என்கிறான். சேவை செய்வதற்காக உன் வீட்டு வாசலில் நாய் போன்று காத்துக்கிடப்பேன் என்பான். இதில் எதுவுமே நடக்கப்போவதில்லை என்றாலும், கதைகளில் மயங்கி ஒவ்வொரு தேர்தலிலும் ஓட்டுப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள் மக்கள். எத்தனை நாடுகள் கிரிக்கெட் விளையாண்டாலும், இந்தியாவும் பாகிஸ்தான் மோதினால் மிகவும் ஆர்வத்துடன் பார்ப்பாய். போட்டி நடப்பதற்கு முன்பு, யார் ஜெயிப்பார்கள் என்று பார்க்கும் நபர்களிடம் எல்லாம் வாக்குவாதம் செய்வாய்.

போட்டி முடிந்தபிறகும் பேசிப்பேசி மாய்வாய். ஏன் பாகிஸ்தான் மேட்ச் மட்டும் முக்கியத்துவம் பெறுகிறது என்று யோசித்துப்பார்த்தால், கதைதான் காரணம். பாகிஸ்தானும் இந்தியாவும் எதிரிகள் போன்று கதை சித்தரித்திருக் கிறார்கள். போர் நடப்பது போன்று ஒரு மாயையை உருவாக்கு கிறார்கள். அதனால் மக்கள் அனைவரும் ஆவலுடன் பரபரப்புடன் காத்திருக்க... அவர்களோ கல்லா கட்டிக்கொள்கிறார்கள்.

### அப்படியென்றால் குழந்தகளுக்குக்கூட கதை சொல்லக்கூடாதா?

சின்ன வயதில் குழந்தைகளுக்கு கதை சொல்வது மிகவும் அவசியம். அப்போதுதான் அவர்கள் அறிவு விரித்தியடையும். கண்ணில் காணாததையும் மூளையால் கண்டறிவார்கள். குழந்தைகள் கற்பனை உலகில் வாழவேண்டியது அவசியம். தன்னை ஒரு ராஜாவாக, மந்திரியாக, போர் வீரனாக, சிங்கமாக நினைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதேநேரம் கதைக்கும் நிஜத்துக்கும் உள்ள வித்தியாசத்தையும் சொல்லித்தர வேண்டும். ஏதாவது ஒரு கதையைக் கேட்டு ஏமாறக்கூடாது என்பதையும் கற்றுத்தர வேண்டும். படுக்கையில் கதை கேட்கலாம். கனவில் கதை கேட்கலாம். சினிமா தியேட்டரில் கதை கேட்கலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில் கதை தேவையில்லை. யாராவது கதை சொல்வது தெரிந்தால், சிரித்துவிட்டு நகரத் தெரியவேண்டும்.

### பலரும் நம்பிக்கொண்டிருக்கும் ஒரு கதை எது?

கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்.







# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்பதற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...

**ஞானகுரு மகிழ்ச்சி**

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா

**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ், கே.எம்.பிரசன்னா

ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜுனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com